விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 280 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 08 திங்கட்கிழமை (25.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## பாணின் விலையை குறைக்கத் திட்டம்
3 ஆம் பக்கம் பார்க்க

## கோட்டா, பிள்ளையானை தூக்கிலிடுக
ரணிலிடம் சஜித்
5 ஆம் பக்கம் பார்க்க



## தியாக தீபத்துக்கு கிளியிலும் அஞ்சலி
11 ஆம் பக்கம் பார்க்க

## கிணற்றில் இருந்து ஆணொருவர் சடலமாக மீட்பு
15 ஆம் பக்கம் பார்க்க

# திலீபனின் நினைவேந்தலுக்கு வடக்கு நீதிமன்றங்கள் அனுமதி

## இரத்தக் களரியை இது ஏற்படுத்தும்
### நீதிமன்றங்களை மீண்டும் சீண்டுகிறார் சரத் வீரசேகர



(கொழும்பு)

திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் நாட்டில் மீண்டும் இன மோதலுக்கு வழிவகுத்து இரத்தக் களரியை ஏற்படுத்தும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## தியாக தீபம் திலீபனுக்கு முல்லையிலும் நினைவேந்தல்
### பெருந்திரளானோர் அஞ்சலி



(முல்லைத்தீவு)

தீயாக தீபம் திலீபனின் 36வது ஆண்டு நினைவுகளைச் சுமந்து, நினைவேந்தல் நிகழ்வுகள் முல்லைத்தீவில் நேற்று நடைபெற்றது.

திலீபன் வீதி மூங்கிலாறு தெற்கு உடையார்கட்டில் உள்ள புதிய நிலா 15

## 'தியாக தீபம்' திலீபனின் 36ஆவது நினைவேந்தலின் நிறைவு நாள் நாளை



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா நோன்பிருந்து உயர்நீத்த தியாக தீபம் திலீபனின் 36ஆவது நினைவேந்தலின் இறுதி நாள் நிகழ்வுகள் நாளை உணர்வெழுச்சியுடன் இடம்பெறவுள்ளதாக தியாக தீபம் 15

## ரயிலுடன் மோதுண்டு பெண்ணொருவர் மரணம்
### மீசாலையில் சம்பவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை வடக்குப் பகுதியில் நேற்றுக் காலை ரயிலுடன் மோதுண்டு வயோதிப பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்ற புகையிரதத்துடன் காலை 4.15 மணியளவில் மீசாலைக்கும்-புத்தூர்ச்சந்திக்கும் இடைப்பட்ட ரயில் பாதையிலேயே குறித்த 15

## பால் புரைக்கேறி மூன்று மாத குழந்தை பலி

(வட்டுக்கோட்டை)

பால் புரைக்கேறியதில் பிறந்து மூன்று மாதங்களேயான குழந்தையொன்று நேற்று உயிரிழந்துள்ளது.

வட்டுக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, 15

அமைச்சரவையில் இன்று அதிரடி மாற்றம்
## ஹெகலியவிடமிருந்து பறிபோகும் சுகாதார அமைச்சு

(கொழும்பு)

சுகாதார அமைச்சு உட்பட நான்கு அமைச்சர்களின் அமைச்சுப் பதவிகளை மாற்றுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதற்கமைய சுகாதார அமைச்சுப் பதவியிலும் முக்கிய மாற்றம் செய்யப்படவுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி ரணில் நாடு, திரும்பியுள்ள நிலையில் இன்று இடம் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Romania வேலைவாய்ப்பு விசா**

**Romania** நாட்டில் **Electrician** மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

**Hybrid International hub (pvt) Ltd, Jaffna**

(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்) (C-7314)

**021 222 1265,076 250 0098**


# 17 ஆம் நூற்றாண்டு கால சிற்பம் தமிழகத்தில் கண்டெடுப்பு

(சென்னை)

தமிழ்நாடு விருதுநகர் மாவட்டம், திருச்சுழி அருகே 17-ம் நூற்றாண்டைச் சேர்ந்த அரிதாக காணக்கூடிய குமிழித்தூணில் வருணன் சிற்பம் கண்டெடுக்கப்பட்டது.

திருச்சுழி வட்டத்துக்கு உட்பட்ட உழக் குடி கிராமத்தில் பாண்டியநாடு பண்பாட்டு மையத்தை சேர்ந்த தொல்லியல்கள ஆய்வாளர்கள் அருப்புக்கோட்டை ஸ்ரீதர், தாமரைக் கண்ணன் ஆகியோர் களஆய்வு மேற்கொண்டதில் இந்த பழமையான வருணன் சிற்பத்தைக் கண்டறிந்தனர்.


இச்சிற்பம் தமிழகத்தில் இதுவரை அரிதாக கிடைத்துள்ள சிற்பங்களில் ஒன்றாகும். அதோடு, விருதுநகர் மாவட்டத்தில் முதன்முறையாக கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து ஸ்ரீதர், தாமரைக் கண்ணன் ஆகியோர் கூறுகையில்,

3 அடி உயரமுள்ள இச்சிற்பத்தில் வருணபகவான் 4 கரங்களோடு காட்சி தருகிறார். தலையில் கரண்ட மகுடம் தரித்துள்ளார். மகுடத்துக்கு மேல் பூந் தோரணம் உள்ளது.

கழுத்தில் ஆபரணங்கள் உள்ளன. இடுப்பில் உதிரபந்தம், இரு கால்களிலும் தண்டை அணிந்து பீடத்தில் சுகாசன கோலத்தில் அமர்ந்துள்ளார்.

நமது முன்னோர் அஷ்ட திக்கு பாலகர்களை அவர்கள் எதற்கு அதிபதியோ அதற்கு ஏற்றார் போல் அந்தந்த இடங்களில்



அவர்களின் சிற்பங்களை பிரதிஷ்டை செய்து வணங்கி வந்துள்ளனர். (7)


## ஒஸ்மானியா கல்லூரி

## பழைய மாணவர்கள் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியின் பழைய மாணவர்களின் மாபெரும் ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 2023-09-28, 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளதாக அதிபர் N.M.Shafie SLPS-1அவர்கள் ஒஸ்மானியா கல்லூரி பழைய மாணவர்களை அன்பாக அழைக்கிறார்.

**28 ஆம் திகதி பி.ப.4.00** மணிக்கு பழைய மாணவர்கள் வரவேற்பும் **பி.ப.5.00** மணிக்கு சிற்றுண்டி பரிமாறலும் **பி.ப.5.15** மணி தொடக்கம் 8 மணி வரை பழைய மாணவர்களின் ஆண்டு ரீதியான நிகழ்ச்சிகள் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து 9 மணி வரை அதிபருக்கும் பழைய மாணவர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் இடம்பெறும்.

இரண்டாம் நாள் 29 ஆம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் 12 .00 மணி வரை சிநேகபூர்வ கிரிக்கட் விளையாட்டும் மதியம் 2.00 மணி தொடக்கம் 6.00 மணிவரை சிநேகபூர்வ உதைப்பந்தாட்டப் போட்டியும் நடைபெறும்.

**மாலை 6.05 மணிக்கு பரிசளிப்பு விழா இடம்பெறும்.**

மூன்றாம் நாள் 30 ஆம் திகதி காலை 6.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை சைக்கிள் ஓட்டப்போட்டியும் காலை 7.00 மணி தொடக்கம் 8.00 மணி வரை மரதன் ஓட்ட போட்டியும் இடம்பெறும்.

மதியம் 1.00 மணிக்கு பழைய மாணவர்கள் அனைவருக்கும் மதிய போசன விருந்து இடம்பெறும்.

பி.ப. 2.00 மணியுடன் ஒன்று கூடல் நிகழ்வு நிறைவடையும்.

(C-7321) *தகவல் - கலாபூஷணம் யாழ். பரீட் இக்பால்.*



**பணிப்பெண் தேவை**

யாழ். நகரிலுள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

(17226)

**077 327 6562**



**யாழ் கலாலயா பயிற்சியகம்**

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம், (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

*கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Beautician*

மணப்பெண் அலங்காரம், பலவிதமான சேலை அணியும் வகுப்புகள்.

சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாள் பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன.

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். (C-7313)



# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**25.09.2023**

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் பொலிகண்டி குகன் குடிசையை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் முருகுப்பிள்ளை சின்னத்துரை (சிவப்பிரகாசம்)

(ஓய்வுநிலை அரச அலுவலர், சமாதான நீதவான் J.P, ஆங்கில மொழி பெயர்ப்பாளர், ஆங்கில ஆசான், குகன் இங்கிலிஷ் சென்ரர் ஸ்தாபகர்)



மலர்வு 1934.12.29

உதிர்வு 2022.09.25

**திவசத்திதி : மஹாளய அமாவாசை**

**14.10.2023 (சனிக்கிழமை)**

**14.10.2023 திவசத்திதிக்குரிய கிரியைகள் வீட்டில் நடைபெறும்.**

நித்தமும் நினைவுடன் நாம் வாழ
அத்தனை நலன்களும் எமக்காக்கி
பத்திரமாய் எம்மை வளர்த்தீர்களே
ஓராண்டு ஆனதென்ன விரைவினிலே

"குகன் குடிசை"
பொலிகண்டி.
077 809 8132, 077 816 1889

(C-7319)

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா அனுசரணையுடன் கூடிய சர்வதேச விசாரணை கட்டாயம்

## திருவாய் மலர்ந்தார் – சம்பந்தர்



(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமைகள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் சம்பந்தமாக உண்மைகளைக் கண்டறியப்பட வேண்டுமாயின் ஐக்கிய நாடுகளின் பிரசன்னத்துடனான சர்வதேச விசாரணையொன்றே அவசியம் என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத்தொடரில் வெளியிடப்பட்டுள்ள இலங்கையில் மீளிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் ஆகியவற்றை முன்னேற்றம்சம்பந்தமான ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க்கின் எழுத்துமூலமான அறிக்கை மற்றும், 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்தமாக சர்வதேச விசாரணையொன்று கோரப்படுகின்றமை ஆகிய விடயங்கள் சம்பந்தமாக கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள்மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் மீறப்பட்ட மனித உரிமைகள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் சம்பந்தமாக அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் நல்லிணக்கம் கட்டியெழுப்பப்படுவதற்கு இனப்பிரச்சினைக்கான நிரந்தரமான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும், சர்வதேச தரப்பினரும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன.

ஆனால், இலங்கை அரசாங்கம் உள்நாட்டில் எவ்விதமான முன்னேற்றகரமான செயற்பாடுகளையும் தொடராதிருப்பதோடு, ஒருசில விடயங்களை ஆரம்பித்திருப்பது போன்று வெளிப்படுத்தினாலும் அவற்றிலும் கால தாமதத்தினைச் செய்து வருகின்றது.

மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம், அவதானிப்பு அறிக்கை உள்ளிட்டவற்றையும் தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கம் நிராகரித்து வருகின்றது.

இலங்கை அரசாங்கம் ஒரு விடயத்தினைப் புரிந்துகொள்ள வேண்டும். உள்நாட்டுப் போரின் போது, இளைஞர்களும், யுவதிகளும் பாதுகாப்பை தேடி படையினரிடத்தில் சரணடைந்தார்கள். அதன் பின்னர் அவர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டுள்ளார்கள். படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

அவர்கள் இந்த நாட்டின் பிரஜைகள். அவர்களுக்கான பாதுகாப்பை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். ஆனால் அந்தக் கடமையிலிருந்து அரசாங்கம் விலகியுள்ளது.

இந்நிலையில், சரணடைந்தவர்கள், கொலைசெய்யப்பட்டவர்கள், காணாமலாக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். அதற்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

இந்தச் செயற்பாட்டை முன்னெடுக்க முடியாது என்று அரசாங்கம் தொடர்ச்சியாக புறந்தள்ளிச் செயற்பட முடியாது. அது மட்டுமன்றி உள்ளக ரீதியில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று காரணம் கூறிக் காலங்கடத்தவும் முடியாது.

உள்ளக ரீதியில் எவ்விதமான முன்னேற்றகரமான விசாரணைகளும் இடம்பெறவில்லை என்பது கடந்த காலங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, உண்மைகளைக் கண்டறிவதற்காக ஐ.நாவின் பங்கேற்புடன் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நடத்தப்பட்டு நான்கு வருடங்களாகின்றன. இதுவரையில் அதனுடன் தொடர்புடையவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை.

இந்நிலையில் தற்போது அந்தத் தாக்குதல் தொடர்பில் சனல்-4 ஊடகம் காணொளியொன்றை வெளிப்படுத்தியுள்ளது. அதில் கூறப்படுகின்ற விடயங்களுக்கு அமைவாக விசாரணைகளை முன்னெடுக்குமாறு பேராயர் உள்ளிட்ட பல தரப்பினரும் கோருகின்றார்கள்.

அத்துடன், உள்ளகப் பொறிமுறைகள் ஊடான விசாரணைகள் மீது நம்பிக்கையின்மை ஏற்பட்டுள்ளதால் சர்வதேச விசாரணையொன்றை தென்னிலங்கையின் பல தலைவர்களும் கோருகின்றார்கள். அவ்வாறான மாற்றம் வரவேற்கத்தக்கது.

ஆகவே, அரசாங்கம், இந்த மிலேச்சத்தனமான தாக்குதலில் உயிரிழந்த உறவினர்களுக்கு பொறுப்புக்கூற வேண்டுமாயின் சர்வதேச விசாரணையொன்றை முன்னெடுத்து உரியவர்களை வெளிப்படுத்த வேண்டும். அதில் தொடர்ந்தும் தாமதங்களை அரசாங்கம் செய்கின்றபோது சர்வதேசம் தலையீடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் வலியுறுத்துகின்றேன் என்றார். (7)

# பாணின் விலையைக் குறைக்க யோசனை

(கொழும்பு)

ஒரு இறாத்தல் பாணின் விலையை 100 ரூபாவாக குறைக்க எதிர்பார்த்துள்ளதாக அகில இலங்கை பேக்கரி சங்கத்தின் தலைவர் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இந்த விலை குறைப்பு குறித்து குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், பல்வேறு வகையான வரிகள் மற்றும் டொலரின் பெறுமதி காரணமாக பேக்கரி பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

அகில இலங்கை பேக்கரி சங்கத்தின் முயற்சியின் கீழ் எதிர்காலத்தில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி சுமார் 100 ரூபாவிற்கு ஒரு இறாத்தல் பாணை வழங்க ஏற்பாடு செய்யவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அரசாங்கம் தலையிட்டால் நிச்சயமாக 100 ரூபாவிற்கு ஒரு இறாத்தல் பாணை வழங்குவதுடன் ஒரு பணிஸின் விலையில் 10 அல்லது 15 ரூபாவை குறைக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# பெற்ற கடனுக்கு முற்றுப்புள்ளி வைத்த இலங்கை

(டாக்கா)

பங்களாதேஷிடம் இருந்து பெறப்பட்ட கடன் தொகை முழுவதையும் இலங்கை செலுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை பங்களாதேஷிடம் இருந்து இலங்கை 200 மில்லியன் டொலர்களை கடனாக பெற்றிருந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை எஞ்சிய கடன் தொகையான 50 மில்லியன் டொலர்களையும் செலுத்தியது.

அத்துடன் அந்த கடனுக்கான வட்டியாக 4.5 மில்லியன் டொலர்களும் செலுத்தப்பட்டுள்ளதாக பங்களாதேஷ் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளன்ர். (நி)

# இனம், மதம் என்ற போர்வையில் நாட்டை சீரழிக்க முயற்சி

## தம்மரத்தின தேரர்

(கொழும்பு)

நாட்டை மீட்பதற்கு மதத் தலைவர்கள் உட்பட மக்கள் ஒரே சக்தியாக செயற்பட வேண்டும் என மிகிந்தலை ராஜமகா விகாரையின் விகாராதிபதி கலாநிதி வலவாகங்குன வெவே தம்மரத்தின தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர், தொடர்ந்தும் ஏமாற வேண்டாம் என இலங்கை மக்களிடம் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கே இவர்கள் அனைவரும் போராடுகின்றார்கள். இனம், மதம் என்ற போர்வையில் நாட்டில் மீண்டும் ரத்தம் சிந்த வைக்கவே இவர்கள் முயல்கின்றனர்.

நாட்டு மக்களே பயங்கரவாதிகளுடன் தொடர்பு கொள்ளாதீர்கள்.

225 பாராளுமன்ற உறுப்பினர்களே இலங்கையை அதள பாதாளத்திற்குள் தள்ளினர்.

அவ்வாறானவர்களுக்கு நீங்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற இடமளித்தால் நாட்டு மக்களாகிய நீங்கள் இதற்கு மேலாக எரிந்து சாம்பலாகி காற்றில் கரைந்து விடுவீர்கள். இந்த நாடும் அழிந்து விடும்.

அதனால், சர்வமதத் தலைவர்கள் உட்பட நாட்டு மக்கள் அனைவரும் ஒரே இட[illegible] அவர் தெரிவித்தார். (நி)


# மரண அறிவித்தல்

அமரர்.
திருமதி.பாக்கியம் பாலச்சந்திரன்



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. பாக்கியம் பாலச்சந்திரன் அவர்கள் 24.09.2023 அதிகாலை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சாந்தலிங்கம் பாலச்சந்திரன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தெய்வர்-சின்னம்மா தம்பதிகளின் மகளும் பாலசங்கர் (கனடா), குமுதினி (கனடா), பாலஸ்கந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வாணி, லவன், சுகன்ஜா ஆகியோரின் மாமியாரும் நல்லம்மா, பூலோகம், சின்னத்துரை, செல்வராசா, தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.09.2023 புதன்கிழமை கனடாவில் நடைபெறும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible]ற்கு-077 476 1959
[illegible]ாவில் கிழக்கு, கோண்டாவில்.

தகவல்
தங்கராசா,
[illegible]

(17221)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரையிறுதிக்குள் நுழைந்தது நாவாந்துறை சென்மேரிஸ்







இளவாலை வருத்தப்படாத வாலிப சங்கம் தனது 10 ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தும் அணிக்கு 9 பேரை உள்ளடக்கிய "வாலிப கிண்ணம்" மாபெரும் உதை பந்தாட்ட போட்டி நேற்று இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்றது.


அதிகளவான பார்வையாளர்களுடன் ஆரம்பமான இப்போட்டியில் ஊறெழு றோயல் அணியை எதிர்த்து நாவாந்துறை சென் மேரிஸ் அணி மோதியது.

ஆரம்பத்தில் இருந்து மிக விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் முதலில் இரு அணிகளும் எதிரணி கோல்க் கம்பங்களை மாறி மாறி ஆக்கிரமிக்க இரு அணிகளும் கோல் போடும் வாய்ப்புக்களை தவற விட முதல் பாதியாட்டம் 00:00 என சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதியாட்டம் ஆரம்பத்திலிருந்து ஆட்டம் சூடுபிடித்தது. இரு அணி வீரர்களும் சளைக்காமல் உத்வேகமெடுத்து ஆட சென்மேரிஸ் அணியின் முன்கள வீரர் ஜெறின்சன் அபார கோலை போட ஆட்டம் 01:00 என சூடுபிடித்தது.

பின்னர் சிறப்பாக விளையாடிய றோயல் அணி கோல் போடுவதற்காக போராடிய போதும் சென்மேரிஸ் அணியின் கோல்க் காப்பாளரின் சிறப்பான தடுப்பாட்டத்தால் கோல் போடுவதற்காக சந்தர்ப்பங்கள் இல்லாமல் போக இரு அணிகளின் இறுதி நேர ஆக்ரோசமாக போராட்டங்கள் பலன் அளிக்காமல் போக ஆட்டம் 01:00 என்ற நிலையில் ஊறெழு றோயல் அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதி பெற்றது நாவாந்துறை சென் மேரிஸ் அணி. (நி-106)

# ஆசிய விளையாட்டு விழா கோலாகலமாக ஆரம்பமானது



சீனாவின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள ஸெஜியாங் மாகாணத்தின் தலைநகரான ஹங்ஸோ நகரில் 19 ஆவது ஆசிய விளையாட்டு விழா வண்ணமயமான தொடக்க விழா வைபவத்துடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பமானது. ஆசியாவின் 45 நாடுகளினதும் விளையாட்டு வீர, வீராங்கனைகளின் ஆற்றல்களை வெளிக்கொண்டு வரப் போகும் 19 ஆவது ஆசிய விளையாட்டு விழாவை சீன ஜனாதிபதி ஸிஜின்பிங் சம்பிரதாய பூர்வமாக தொடக்கி வைத்தார்.

இலங்கைக்கான அணி வகுப்பில் இலங்கை தேசிய கொடியை கோல்வ் வீரர் அநுர ரோஹனவும் மத்திய தூர ஓட்ட வீராங்கனை கயன் திகா அபேசேகரவும் கூட்டாக ஏந்திச் சென்றனர். (நி)





தியாக தீபம் திலீபனின் 36 ஆவது ஆண்டின் நினைவு நாளை முன்னிட்டு நேற்று சுதந்திரபுரம் வினோதன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் மரதன் ஓட்டப் போட்டி நடைபெற்றது. இம் மரதன் ஓட்டப் போட்டியில் 40 இற்கும் மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் போட்டியிட்டனர். போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

(படங்கள்-தேவானந்தன்)

# பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய பொறுப்பில் இருந்து ஹபீஸ் விலகல்



பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் தொழில்நுட்பக் குழுவில் முன்னாள் வீரர் முகமது ஹபீஸ் 2 மாதங்களுக்கு முன்பு இப்பொறுப்பில் நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் தொழில்நுட்பக் குழுவில் இருந்து விலகுவதாக முகமது ஹபீஸ் திடீரென்று அறிவித்தார்.

இது தொடர்பாக அவர் டுவிட்டரில் கூறும்போது, பாகிஸ்தான் கிரிக்கெட் தொழில்நுட்பக் குழுவில் இருந்து விலக முடிவு செய்துள்ளேன்.

எனக்கு இந்த வாய்ப்பை வழங்கியதற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கான எனது நேர்மையான ஆலோசனைகள் தேவைப்படும் போதெல்லாம் நான் எப்போதும் அளிப்பேன்.

எப்போதும்போல் பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு எனது வாழ்த்துக்கள் என்று கூறியுள்ளார். (5-6)

# உலகக்கிண்ண தொடருக்கான பரிசுத்தொகை அறிவிப்பு

இந்தியாவில் 50 ஓவர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் ஆரம்பமாக உள்ளது.

இந்த தொடரில் இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா உள்ளிட்ட 10 அணிகள் கலந்து கொள்ளவுள்ளன.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் ஆரம்ப ஆட்டத்தில் இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகள் அகமதாபாத்தில் மோதவுள்ளன.

இந்நிலையில், உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான பரிசுத் தொகையை சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித்துள்ளது.

அதன்படி, சம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு 4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பரிசும் இரண்டாவது இடத்தை பெறும் அணிக்கு 8 இலட்சம் அமெரிக்க டொலரும் அரையிறுதியில் தோல்வி அடையும் 2 அணிகளுக்கும் 6 மில்லியன் அமெரிக்க டொலரும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குழு நிலை சுற்றுப் போட்டிகளுடன் வெளியேறும் அணிகளுக்கு 40 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பரிசும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டா, பிள்ளையானை தூக்கிலிட வேண்டும்

## ரணிலிடம் சஜித் வலியுறுத்து



(கொழும்பு)

"முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் இந்நாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனும் மாபெரும் மனிதப் படுகொலைக் குற்றவாளிகள். அவர்கள் இருவரையும் தூக்கிலிட வேண்டும். அதை விடுத்து அவர்களைப் பாதுகாக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கக் கூடாது."

இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச. அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் மன்னிக்கவே முடியாத மாபெரும் குற்றச் செயல். இந்தத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் என்று சனல் 4 தொலைக்காட்சி அடையாளம் காட்டியுள்ள கோட்டாபயவும் பிள்ளையானும் மறுப்பு அறிக்கைகளை விட்டுத் தப்ப முயல்கின்றனர்.

அதேவேளை, சனல் 4 தொலைக்காட்சியின் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ள ஆணைக்குழுவும் அரசு நியமிக்கும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவும் கோட்டாபயவையும் பிள்ளையானையும் காப்பாற்றுவதற்கான திட்டங்களாகும். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விவகாரம் இன்று சர்வதேச சமூகத்தின் முழுக் கவனத்தையும் ஈர்த்துள்ளது. எனவே, இது தொடர்பில் சர்வதேச விசாரணைக்கு ஜனாதிபதி இடமளிக்க வேண்டும். அதைவிடுத்துத் தூக்கிலிடப்பட வேண்டிய மாபெரும் மனிதப் படுகொலைக் குற்றவாளிகளான கோட்டாபயவையும் பிள்ளையானையும் பாதுகாக்க ஜனாதிபதி முயற்சிக்கக்கூடாது.

கோட்டாபய, பிள்ளையான் மட்டுமல்ல உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்ட பாதுகாப்புத் தரப்பினர், அரசியல்வாதிகள் மற்றும் தனி நபர்கள் ஆகியோருக்கும் உரிய தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்" எனத் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் விசாரணைக்குத் தான் எந்நேரமும் தயார் என்றும் தன் மீதான குற்றச்சாட்டுக்கள் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டால் தூக்கு மேடைக்கும் செல்லத் தான் தயார் என்றும் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஓய்வுபெற்ற கணக்காய்வாளர்களுக்கான கொடுப்பனவை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

ஓய்வுபெற்ற கணக்காய்வாளர்களுக்கு 25,000 ரூபா கொடுப்பனவை ஓய்வூதியத்துடன் 50,000 ரூபாவாக அதிகரிப்பதற்கான யோசனை பிரதமர் மற்றும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்தனவினால் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற சமீபத்திய கோட்பாடு புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ள இந்த பிரேரணை அடுத்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ளது.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் கடந்த ஒகஸ்ட் 28ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் கடந்த 4 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அது அங்கீகரிக்கப்பட்டது. (நி)



# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியால் அதிகரிக்கும் தனிநபர் கடன்

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவு நடத்திய ஆய்வில் இலங்கையில் நான்கு பேர் கொண்ட குடும்பத்தின் கடன் சுமை 47 இலட்சம் ரூபாவைத் தாண்டியுள்ளதாக தெரியவந்துள்ளது.

பொருளாதார திணைக்களத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரள குறித்த ஆய்வின்படி இலங்கை பிரஜை ஒருவருடைய கடன் தொகையானது 7 இலட்சம் ரூபாவை அண்மித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

நாட்டில், 2022 ஏப்ரல் முதல் 2023 ஏப்ரல் வரை ஒவ்வொரு தனிநபரும் கிட்டத்தட்ட 1 லட்சத்து 30,000 ரூபாய் கடன் பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும், இத் தனிநபர் கடன் அதிகரிப்புக்கு, அரசாங்கம் வெளிநாடுகளில் இருந்து கடன் வாங்குவதும் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைவதுமே முக்கிய காரணம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)

# அடுத்த வாரம் ஜனாதிபதி — ஜேர்மன் பயணம் —

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேர்லின் உலகளாவிய மாநாட்டில் பங்கேற்பதற்காக அடுத்த வாரம் ஜேர்மன் பயணிக்கவுள்ளார்.

இந்த மாநாட்டில் ஜனாதிபதி முதல் நாளில் உரையாற்றவுள்ளதுடன் ஜேர்மானியின் அரச தலைவர் பிற அரசியல் மற்றும் வணிகத் தலைவர்களுடனான சந்திப்புகளையும் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இந்த ஜேர்மனிக்கான இரண்டு நாள் விஜயத்தில் பங்கேற்கவுள்ள ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க, வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆர். எச். எஸ் சமரதுங்க மற்றும் நிதியமைச்சின் ஆலோசகர் தேஷால் டி மெல் ஆகியோர் ஜேர்மன் அரசாங்க பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# எக்ஸ்பிரஷ் கப்பல் விபத்திற்கான இழப்பீட்டுத் தொகை கிடைக்கப்பெற்றது

(கொழும்பு)

எக்ஸ் பிரஷ் பேர்ள் கப்பல் விபத்திற்கான இடைக்கால இழப்பீட்டுத் தொகை நாட்டிற்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 878,650.53 அமெரிக்க டொலர் இடைக்கால இழப்பீடாக கிடைக்கப்பெற்றுள்ளது.

எஞ்சிய 16 மில்லியன் ரூபா கொடுப்பனவு கிடைக்கப்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தொகையானது கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் செலவுகளுக்காகக் கிடைக்கப் பெற்றுள்ளது. கப்பல் நிறுவனத்திற்கான காப்புறுதி நிறுவனத்துடன், அண்மையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டிற்கு அமைய குறித்த இடைக்கால இழப்பீட்டுத் தொகை இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. (நி)

# இராசிபலன்

25.09.2023
புரட்டாதி 08, திங்கட்கிழமை
ஏகாதசி பின்னிரவு 1.52 மணிவரை
உத்தராடம் முற்பகல் 9.15 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
பரிவர்த்தன ஏகாதசி விரதம்
சந்திராஷ்டமம்- திருவாதிரை

வளவன்

**மேஷம்**: கனவு பலிதமுண்டு, செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**கடகம்**: ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு வரலாம், அன்பு நண்பர்கள் ஆதரவு பெருகும் நாள்.

**துலாம்**: வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், நம்பி வந்தவருக்கு கைகொடுத்து உதவுவீர்கள், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்**: பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், கொடுக்கல் -வாங்கல்கள் ஒழுங்காகும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்**: சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அதிகம் செலவாகுமென நினைத்த காரியம் குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம், திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்**: போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், உடல்நலன் சீராகும், செய்தொழில் மேன்மையுண்டு.

**விருச்சிகம்**: பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், உறவினர் நண்பர்கள் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்**: சிறிய வேலையொன்றுக்காக பலமுறை அலைய நேரிடலாம், தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்**: மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, தேவையற்ற விரயங்கள் ஏற்படலாம், முயற்சிகளில் கூடிய அக்கறை தேவை.

**கன்னி**: உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம்.

**தனுசு**: தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மீனம்**: பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், நட்பு வட்டம் விரிவடையும் நாள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

துறவிகளின் தோற்றம் சிறு குழந்தைகளுக்கு இருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழிற்கு வருகை தந்த பிரபல இந்திய இசையமைப்பாளர்

## தீலீபன் நினைவிடத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்தினார்





(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் பிரபல இசையமைப்பாளர்களில் ஒருவரான சந்தோஸ் நாராயணன் யாழ்ப்பாணத்திற்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை வருகை தந்துள்ளார்.

யாழ்வருகை தந்த சந்தோஸ் நாராயணனை ஈழத்தின் புகழ் பெற்ற நாதஸ்வர வித்துவான் பஞ்சமூர்த்தி குமரன் உள்ளிட்டவர்கள் வரவேற்றனர். அவர் நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு தனது பாரியாருடன் சென்று அஞ்சலி செலுத்தினார். ( நி-33)

# கொடிகாமத்தில் இருந்தும் ஊர்தி பவனி ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் மற்றுமொரு ஊர்தி பவனி யாழ்ப்பாணம் கொடிகாமம் பகுதியில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்ப மானது.

குறித்த ஊர்தி பவனி கொடிகாமத்திலிருந்து ஆரம்பித்து சாவகச்சேரி, பூநகரி, முழங்காவில், மன்னார், வவுனியா ஊடாக பயணித்து கிளிநொசசியை வந்தடைந்து நாளை செவ்வாய்க்கிழமை யாழ். நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தை வந்தடையவுள்ளது.(நி-33)



யாழ்ப்பாணம் வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தொழிற் பயிற்சியை நிறைவு செய்த வர்களுக்குக்கான ச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபை உத்தியோகத்தர் தலைமையில் இடம்பெற்றது. (படம்: கஜிந்தன்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2922

ரூபி




விமல்




நரேன்





பவானி




தருண்




கௌரி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் சட்டமூலங்களை வாபஸ் பெற வேண்டும்

## இலங்கை சட்டத் தரணிகள் சங்கம் வலியுறுத்து

(கொழும்பு)

வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்தை உடனடியாக மீளப்பெறுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு சட்டங்களும் மனித சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சியை கடுமையாக பாதிக்கிறது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட துறைசார்ந்த தரப்பினருடன் எவ்வித ஆலோசனையும் இன்றி இந்த சட்ட மூலங்கள் வரையப்பட்டுள்ளதாகவும் அச்சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இதனடிப்படையில், சமூகத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சட்டங்களை அறிமுகப் படுத்துவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் அர்த்தமுள்ள முறையான உரையாடல்களை மேற்கொள்வது முக்கியம் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (நி)


# 4 அமைச்சுப் பதவிகளில் மாற்றம்

(கொழும்பு)

நான்கு அமைச்சர்களின் அமைச்சுப் பதவிகளை மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு அல்லது மூன்று அமைச்சரவைப் பதவிகள் ஒதுக்கப்பட்டுள்ள அமைச்சர்களிடமிருந்து சில அமைச்சுக்களை மற்றவர்களுக்கு ஒதுக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (நி)

# நாடு திரும்பினார் ஜனாதிபதி



(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் 78 வது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துக் கொள்வதற்காக அமெரிக்காவின் நியூயோர்க் நகரிற்கு விஜயம் முன்னெடுத்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியுள்ளார்.

துபாயில் இருந்து நேற்றுக் காலை வந்த விமானத்தில் ஜனாதிபதி கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 15 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை கியூபாவின் ஹவானா நகரில் நடைபெற்ற ஜீ.77 நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார்.

இதன் பின்னர் கடந்த 19 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை ஐக்கிய நாடுகளின் 78 வது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துக் கொள்வதற்காக அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்திற்கு பயணித்திருந்தார்.

இதன்போது, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் உள்ளிட்ட பல்வேறு அரச தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## யாழிலிருந்து சென்ற

# தனியார் பேருந்து- முச்சக்கரவண்டி மோதி விபத்து : இருவர் உயிரிழப்பு





(கொழும்பு)

குருணாகல் தம்புள்ளை பிரதான வீதியின் கலேவெல பெலிகமுவ பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை தனியார் பேருந்தும் முச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதியதில் முச்சக்கர வண்டியில் பயணித்த இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து எம்பிலிப்பிட்டி நோக்கி பயணித்த தனியார் பேருந்தும், ஆராச்சிக்கட்டுவ பகுதியில் இருந்து தம்புள்ளை நோக்கி பயணித்த முச்சக்கரவண்டியுமே மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்தில் காயமடைந்த முச்சக்கரவண்டியில் சென்றவர்கள் ஆராச்சிக்கட்டுவ பகுதியைச் சேர்ந்தவர்கள் என ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாக கலேவெல பொலிஸார் தெரிவித்தனர். (நி)

## சிசுக்களை விற்பனை செய்யும் மோசடி அம்பலம்

# வைத்தியசாலை ஊழியர் சிக்கினார்

(கொழும்பு)

கண்டி வைத்தியசாலையில் பணியாற்றும் சிற்றூழியர் ஒருவர் பச்சிளம் குழந்தைகளை விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இந்த வியாபார நடவடிக்கையை சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் கண்டுபிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் நாவுல பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது இவரின் இந்த மோசடியான செயற்பாடு கண்டுபிடிக்கப்பட்டது.

காலி மற்றும் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இரண்டு குடும்பங்களுக்கு விற்பனை செய்யும் நோக்கில் இவரின் வீட்டில் இரண்டு மாத கைக்குழந்தைகள் இரண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கண்டி நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் நீதிமன்ற உத்தரவைப் பெற்று இரண்டு சிசுக்களையும் சிறுவர் இல்லத்தில் ஒப்படைத்ததாகவும் இந்த குழந்தைகளின் தாய் ஒருவர் தெல்தெனிய பிரதேசத்திலும் மற்றையவர் நிகவெரட்டியிலும் வசிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (நி)

# 50 என்ஜின்கள் பழுது

## ரயில் போக்குவரத்து பாதிப்பு

(கொழும்பு)

50 ரயில் என்ஜின்கள் பல்வேறு காரணங்களால் பழுதடைந்து காணப்படுவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக ரயில் போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டது.

இந்தியா, ஜப்பான், சீனா, அமெரிக்கா மற்றும் கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட என்ஜின்கள் தொழில்நுட்பக் குறைபாடுகளால் பழுதடைந்துள்ளதாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் எம்.ஜே.இதிபொலகே தெரிவித்தார்.

நாளாந்தம் ரயில் போக்குவரத்திற்கு 75 என்ஜின்கள் தேவைப்படுகின்ற நிலையில், தற்போது 50 என்ஜின்களே உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>கி.பா: 8<br>உயரம்: 5' 6<br>தகைமை/தொழில்: BSc,Sports officer (அரச)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச உத்தியோகம்.<br>தொ.இ: B/13975 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>கி.பா: 39<br>உயரம்: 158 cm<br>தகைமை/தொழில்: BSc (Bio medical science) medical laboratory technologist<br>எதிர்பார்ப்பு: படித்த/உயர் பதவியிலுள்ளவர்.<br>தொ.இ:G/13966 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>தகைமை/தொழில்: A/L(Tech)Welding<br>எதிர்பார்ப்பு: குணமான பெண்<br>தொ.இ: B/13976 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 34<br>உயரம்: 5' 1<br>தகைமை/தொழில்:BA,Do<br>எதிர்பார்ப்பு: அரச/ தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/13970 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம் : அவிட்டம்<br>கி.பா: 69<br>உயரம்: 5' 8<br>தகைமை/தொழில்: A/L Canada<br>எதிர்பார்ப்பு: படித்த, அழகான பெண்<br>தொ.இ: B/13977 | பிறப்பு: 1993 Rc<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>உயரம்: 5' 5<br>தகைமை/தொழில்: BSc (Agriculture) Accounting<br>எதிர்பார்ப்பு: அரச/ தனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/13971 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 9 3/4<br>உயரம் : 5' 9<br>தகைமை/ தொழில்: A/L விற்பனை முகவர்<br>எதிர்பார்ப்பு: அரச/ தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/13980 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 9 இல் சூரி, செவ்<br>கி.பா: 44<br>உயரம் : 5' 9<br>தகைமை/தொழில்: MBBS (Doctor)<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ:G/13972 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## முகநூல் தரிசனம் 206

### தனியனாக ஏற்றிய மெழுகுவர்த்தி இன்று பிரகாசமாக எரிகிறது

1884 ஆம் ஆண்டு நம் நாட்டில் கடுமையான பஞ்சம், பட்டினி, சாவு சுமார் 50 லட்சத்தை தாண்டியது. பசியால் எலும்பும் தோலுமாக மாறிவிட்ட குழந்தைகளுக்கு ஒருவேளை கூட சாப்பாடு இல்லாத நிலைமை. அதனால், அமெரிக்காவை சேர்ந்த கிறிஸ்தவ அமைப்புகள் நமக்கு மருத்துவ சிகிச்சை, உணவு தருவதற்காக கப்பலில் இந்தியா வந்தன. அப்படி நம்முடைய ராணிப்பேட்டைக்கு வந்தவர்தான் டாக்டர் ஜான். இவரது 14 வயது மகள் ஐடா ஸ்கடர்.

ஒருநாள் இரவு கதவு தட்டப்படுகிறது. ஐடா கதவை திறக்கிறார். ஒரு பிராமணர் நின்று கொண்டிருந்தார். "அம்மா, என் மனைவி பிரசவ வலியால் துடிக்கிறாள். உதவி வேணும் உடனே வாங்க" என்று பதறுகிறார்.

ஐடாவோ, "நான் டாக்டர் இல்ல என் அப்பாதான் டாக்டர், கொஞ்சம் இருங்க அவரை எழுப்புறேன்" என்கிறார்.

"இல்லம்மா. என் மனைவிக்கு 14 வயசு தான் ஆகுது. நாங்க பிராமணாளுங்க பெண்ணை ஒரு ஆம்பள தொட அனுமதி இல்லை" என்று சொல்லிவிட்டு கிளம்பி விடுகிறார்.

கொஞ்ச நேரத்தில் ஒரு முஸ்லிம் நபர் கதவை தட்டுகிறார். மனைவிக்கு பிரசவ வலி என்பதால் உடனே வருமாறு அழைத்தார். ஐடா தன் தந்தையை பற்றிக்கூற, "வேண்டாம்மா... நாங்கள் இஸ்லாமியர்கள்... எங்க வீட்டு பொண்ணை ஆண்கள் பார்க்கவே கூடாது" என்று அவரும் சோகத்துடனே திரும்பிவிடுகிறார். அந்த பெண்களுக்கு என்ன ஆச்சோ என்று இரவெல்லாம் பதட்டத்துடன் துடித்து பதறுகிறாள் ஐடா. மறுநாள் காலை அந்த கர்ப்பிணிகளின் சடலங்கள், தன் வீட்டை கடந்து கொண்டு செல்லப்படுவதை பார்த்து அதிர்ந்து போய், தேம்பி தேம்பி அழுகிறாள் ஐடா.

"என்ன தேசமிது? பெண்களை படிக்க வைக்க மாட்டாங்களாம், ஆனால் பெண்ணுக்கு பெண்தான் பிரசவம் பார்க்க வேண்டுமாம்? இந்த நாட்டில் பெண்களை படிக்கவிடவில்லை என்றால் என்ன, நான் படித்துவிட்டு வந்து இந்த பெண்களை காப்பாற்றுவேன்" என சபதமேற்று அமெரிக்கா சென்று படிக்கிறார். டாக்டராகிறார்.

இதனிடையே, சக நண்பர் ஒருவர் ஐடாவை காதலிக்கிறார். ஆனால் ஐடா அந்த காதலை நிராகரிக்கிறார். மருத்துவம் படித்து முடித்ததுமே அமெரிக்காவிலேயே நல்ல வேலை வாய்ப்புகள் வந்தன. ஆனால் ஐடா அதையும் நிராகரிக்கிறார். தமிழகத்தில் இறந்து போன அந்த கர்ப்பிணிகளின் சடலங்கள் மட்டுமே அவர் கண்முன் வந்து வ்ந்து போயின.

ஆனால், வெறும் படிப்பை மட்டும் வைத்துக் கொண்டு எவ்வளவு பேரை தமிழ்நாட்டில் காப்பாற்ற முடியும் என்று நினைத்து, ஒரு ஆஸ்பத்திரி தேவை என்பதை உணர்கிறார். பல நாடுகளில் இந்தியாவின் அவலத்தை சொல்லி பிச்சை எடுக்காத குறையாக நிதி உதவி கேட்கிறார். ஓரளவு நிதியும் சேர்கிறது. இனி ஒரு கர்ப்பிணியைகூட சாக விடமாட்டேன் என்ற உறுதியுடன் 1900 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், தமிழகத்தில் மீண்டும் கால்பதிக்கிறார் ஐடா.

ஆஸ்பத்திரி கட்டும் பணியை ஆரம்பிக்கிறார். படாதபாடு பட்டு இறுதியில் 40 படுக்கை வசதியுடன் அந்த மருத்துவமனை ஒருவழியாய் கட்டி முடிக்கப்பட்டு விட்டது.

பெண்ணுரிமை என்ற பேச்சுக்கே இடமில்லாத நேரத்தில், பெண்களுக்காகவே ஒரு மருத்துவமனையையே கட்டி முடித்தார் இளம்பெண் ஐடா. அதுதான் ஆசியாவிலேயே தனிப்பெருமை வாய்ந்து. நூற்றாண்டையும் கடந்து இன்றும் பிரம்மாண்டமாய் நிற்கும் வேலூர் "சிஎம்சி" ஆஸ்பத்திரி.

ஐடாவின் பணி இத்துடன் முடியவில்லை. அந்த பகுதியில் உள்ள ஒவ்வொரு வீட்டுக் கதவையும் தட்டி, உங்கள் வீட்டு இளம்பெண் பிள்ளைகளை படிக்க அனுப்புங்கள் என்று கெஞ்சி கூத்தாடினார். இறுதியில் 5 இளம்பெண்களை மட்டுமே அவரால் திரட்ட முடிந்தது. அவர்களுக்கு மருத்துவ பயிற்சி தந்து, முறைப்படி தேர்வு எழுதி, தேர்ச்சியும் பெற வைத்தார் ஐடா.

இவர்கள் தான் நம் தமிழகத்தின் முதல் 5 நர்ஸ்கள்.

நம்முடைய பெண்கள் மருத்துவம் படிக்க விதை போட்டதே, இந்த ஐடா தான் என்பதை எத்தனை பேர் நன்றியுடன் இன்று நினைத்து பார்க்கிறார்களோ தெரியவில்லை.

ஆனால், யார் இந்த பெண்? இவர் ஏன் நமக்காக அழுதார்? இவர் ஏன் நமக்காக உருகினார்? இவர் ஏன் நமக்காகவே கடைசிவரை வாழ்ந்தார்? எங்கேயோ பிறந்து, எங்கேயோ வளர்ந்து, நம் தமிழ்நாட்டுக்காக, தன் வாழ்க்கையையே மொத்தமாக அர்ப்பணித்த ஐடா, அன்னை தெரசாவுக்கே "வழிகாட்டி" என்று சொன்னால் உங்களால் நம்ப முடிகிறதா?

ஆனால், ஒரு பெண் தனி ஆளாக நின்று ஏற்றிய மெழுகுவர்த்தி, இன்று பிரகாசமாக, உலகத் தரத்தோடு, வேலூரில் இன்னமும் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. லட்சக்கணக்கான மக்களுக்கு உயிர் தந்து கொண்டுருக்கிறது.

# வறுமைக் கோட்டிற்

# அபாய கட்டத்தில் பாகிஸ்



## உலக

**(வோஷிங்டன்)**

**பாகிஸ்தானில் வறு**
**அபாயகரமான அள**
**கோடியே 25 லட்சம் ே**
**வங்கி எச்சரித்துள்ள**

தற்போது காபந்து அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் பாகிஸ்தானில் வரும் ஜனவரி மாத இறுதியில் தேர்தல் நடைபெறவுள்ளது. இதனால் அந்நாடு எடுக்க வேண்டிய சில முக்கியமான கொள்கை முடிவுகள் குறித்து அந்நாட்டிற்கு கடன் உதவி செய்து வரும் உலக வங்கி, புதிய அரசாங்கத்திற்கு ஆலோசனைகளை வழங்க அறிக்கை தயாரித்து வருகிறது.

அந்நாட்டிற்கு நிதி உதவி செய்ய பல நாடுகள் முன்வராத, காரணத்தால், கடன் உதவி செய்யும் உலக வங்கி, தேசிய நாணய நிதியம் போன்ற நிதி நிறுவனங்கள் பல நிபந்தனைகளை அந்நாட்டிற்கு விதிக்கின்றன.

# சோமாலியாவில் குண்டுத் தாக்குதல் 18 பேர் பலி, 40 பேர் படுகாயம்

(மெகாடிஷு)

ஆபிரிக்காவின் சோமாலியாவில் நேற்று முன்தினம் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 18 பேர் உயிரிழந்ததாக பிராந்திய உயர்மட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



சோமாலியாவின் பெலிட்வினி நகரில் வாகனம் ஒன்று வெடி மருந்துகளை நிரப்பி கொண்டு சென்ற போது அங்குள்ள சோதனைச்சாவடி அருகே வந்ததும் பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது.

இதன்போது 18பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். இவர்களில் 5 பேர் பொலிஸார் எனத் தெரிய வந்துள்ளது.

மேலும் இந்த சம்பவத்தில் 40இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ( நி)

# தென்னாபிரிக்காவில் வேகமெடுக்கும் பறவை மனிதர்களுக்கும் பரவக் கூடும் என்ப

(பிரிட்டோரியா)

தென்னாபிரிக்காவில் பறவைக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதனால் கோழி இறைச்சி மற்றும் முட்டை தட்டுப்பாடு ஏற்படலாம் என தென்னாபிரிக்க கோழிப் பண்ணையாளர்கள் எச்சரித்துள்ளனர். பறவைக் காய்ச்சல் மூலம் இவ்வாண்டில் கிட்டத்தட்ட 2 மில்லியன் கோழிகள் கொல்லப்பட்டுள்ளன.

இந்நிலையில் கோழி இறைச்சி மற்றும் முட்டை தேவையை பூர்த்தி செய்ய முடியாமல் விலை வேகமாக உயரக்கூடும் என்பதால் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தென்னாபிரிக்க நாட்டு கோழிப்பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ..கு கீழ் 1 கோடி பேர்

# ..ஸ்தான் பொருளாதாரம்

## ..க வங்கி எச்சரிக்கை

**..வறுமை குறியீடு 39.4 சதவீதத்தை தொட்டு ..அளவை எட்டியுள்ளது. இதனால் சுமார் 1 ..ம் பேர் பாதிக்கப்பட போகின்றனர் என உலக ..ள்ளது.**

விவசாயத்தையும் ரியல் எஸ்டேட் துறையையும் அந்நாடு வரி வளையத்திற்குள் கொண்டு வர வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது. மேலும், தேவையற்ற செலவினங்களை குறைக்கவும் ஆலோசனைகளை வழங்கி வருகிறது. ஆனால் இதற்கு அங்கு பெரும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

பாகிஸ்தான், மனித வளத்திலும் பொருளாதார நிலையிலும் பெரும் நலிவை சந்தித்து வருவதாக கூறும் உலக வங்கி அதனை சீர் செய்ய அதிரடியாக சில முடிவுகளை எடுக்க அந்நாட்டை வலியுறுத்துகிறது.

கடும் விலைவாசி உயர்வாலும் வேலையில்லா திண்டாட்டத்தாலும் மாதாந்திர மின் கட்டணத்தை கூட செலுத்த முடியாமல் மக்கள் அவதியுற்று வருகின்றனர்.

“சந்திரயான்-3 சாதனை மூலம் இந்தியா நிலவுக்கே விண்கலன் அனுப்பி பெருமையடைகிறது. ஆனால் நாம் இந்தியாவை விட அனைத்திலும் பின்தங்கியுள்ளோம்" என அந்நாட்டின் மூத்த அமைச்சர் ஒருவரே சமீபத்தில் கருத்து தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. (நி)

# ஆறு மாதக் குழந்தையை கடித்துக் குதறிய எலிகள்

## கம்பி எண்ணும் பெற்றோர்



(வோஷிங்டன்)

ஆறு மாதங்களேயான கைக்குழந்தையை எலிகள் கடித்து குதறியதில் காயமடைந்த குழந்தை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதோடு, குழந்தையின் பெற்றோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அமெரிக்காவில் இண்டியானா மாநிலத்தில் உள்ள எவான்ஸ்வில் பகுதியில் டேவிட் ஷோனபாம் மற்றும் ஏஞ்சல் ஷோனபாம் தம்பதியினர் வசித்து வரு கின்றனர். இவர்களுக்கு பிறந்து 6 மாதங்களேயான ஆண் குழந்தை ஒன்று உள்ளது.

சில நாட்களுக்கு முன்பு, தனது 6 மாத ஆண் குழந்தையின் உடலெங்கும் காயங்கள் இருப்பதாக எவான்ஸ்வில் அவசரசேவைக்கு டேவிட் தகவலளித்தார்.

இதனையடுத்து அவர்கள் வீட்டிற்கு பொலிஸார் விரைந்து வந்து பார்த்த போது அக்குழந்தை தலை மற்றும் முகத்தில் 50 இடங்களில் காயங்களுடன் உடல் முழுவதும் ரத்த களரியாக காணப்பட்டான்.

வலது கரத்தில் அனைத்து விரல்களின் தலைப் பாகங்களிலும் சதை முழு வதுமாக காணாமல் போயி ருந்தது. ஒரு சில விரல் களில் உள்ளேயிருக்கும் எலும்பு வெளியே தெரியும் அளவிற்கு காயங்கள் இருந்தன.

அக்குழந்தை உடனடியாக இண்டியானா பொலிஸ் நகர மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு இரத்தம் செலுத்தப்பட்டது.

அங்கு அளிக்கப்பட்ட தீவிர சிகிச்சையின் விளைவாக குழந்தை உயிர் பிழைத்ததுடன், காயங்களுக்கான காரணங்கள் குறித்து பொலிஸார் மேற்கொண்ட ஆய்வில் அக்குழந்தையை ஒன்றுக்கும் மேற்பட்ட எலிகள் கடித்திருப்பது தெரியவந்தது.

வீடு முழுவதும் குப்பை கூழங்கள் நிறைந்து எலிகள் நடமாட்டம் இருப்பதும் தெரியவந்தது. இதனையடுத்து குழந்தையை வளர்ப்பதில் பொறுப்பற்ற முறையில் இருந்ததற்காகவும் பராமரிக்கும் கடமையில் தவறியதற்காகவும் அத்தம்பதியினரை பொலிஸார் கைது செய்தனர்.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள அவர்கள் மீது அந்நாட்டு சட்டப்படி சம்பந்தபட்ட பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மருத்துவமனை சிகிச்சை முடிந்து அந்த குழந்தை; குழந்தைகள் பராமரிப்பு நிலையத்திற்கு மாற்றப்பட்டு தற்போது நலமாக உள்ளது.

தேசிய குழந்தைகள் நலனுக்கான துறையின் பொறுப்பில் அந்த வீட்டில் உள்ள ஏனைய இரு குழந்தைகளும் தற்போது அரசு பொறுப்பில் காப்பகத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். (நி)


# உலகின் சக்தி வாய்ந்த நாடுகள் பட்டியலில் அமெரிக்கா, சீனா முன்னிலையில்

2023 ஆம் ஆண்டிற்கான உலகின் சக்தி வாய்ந்த நாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

உலகளாவிய சக்தி தரவரிசையில் அமெரிக்கா, சீனா மற்றும் ரஷ்யா ஆகியவை உலகின் சக்தி வாய்ந்த நாடுகளாக தமது நிகரற்ற நிலைகளைத் தக்க வைத்துள்ளன.

அரசியல் செல்வாக்கு, பொருளாதார வளங்கள் மற்றும் இராணுவ வலிமை ஆகியவற்றை வைத்து இந்த பட்டியல் மதிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் ஸ்திரத்தன்மை, பொருளாதார செல்வாக்கு, பாதுகாப்பு வரவு - செலவுத் திட்டம், ஆயுதம், உலகளாவிய கூட்டணிகள், மென்மையான சக்தி



மற்றும் இராணுவ வலிமை, அதிகாரம் என்பன ஒரு நாட்டின் அரசியல் வலிமை அல்லது வலுவான இராணுவம் மற்றும் பாதுகாப்பு அமைப்பை அடிப்படையாகக் கொண் டது என்று சிலர் வாதிட்டாலும் இந்தப் பண்புகளே நாடுகளைத் தனித்து நிற்க வைக்கின்றன. (நி)

# ..றவைக்காய்ச்சல் ..பதால் அச்சம்

மேலும், ஆர்ஜென்டினாவில் உள்ள கடல் சிங்கங்கள் முதல் பின்லாந்தில் உள்ள நரிகள் வரை உலகெங்கிலும் உள்ள பாலூட்டிகளை இது அதிகளவில் பாதிக்கிறது. இது மனிதர்களுக்கு எளிதில் பரவக்கூடும் என்ற அச்சத்தை எழுப்பி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலின் வருகையை எதிர்த்து ஏவுகணை தாக்குதல் நடத்திய வடகொரியா

(சியோல்)

வட கொரியா மீண்டும் தென்கொரியா மீது ஏவுகணைகளை ஏவியுள்ளதாக தென்கொரியா இராணுவம் தெரிவித்துள்ளது.

தென்கொரிய துறைமுகத்தில் அணு ஆயுதம் கொண்ட அமெரிக்க நீர்



மூழ்கிக் கப்பலின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே இந்த ஏவுகணை தாக்குதல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை வடகொரியா தலைநகரான பியாங்யாங் பகுதியில் இருந்து மற்றுமொரு ஏவுகணையொன்றும் ஏவப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நீரிழிவு நோயிற்கு உணவுப் பழக்கவழக்கமும் மூலிகைப் பாவனையும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

முதிர்ந்த கறிவேப்பிலைகளை சேகரித்து நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து 2 கிராம் அளவு காலை ,மாலை வெந்நீரில் அருந்தலாம்.

ஆவாரையின் இலை, பூ , காய் , பட்டை , வேர் எனும் 5 பாகங்களையும் குடிநீர் காய்ச்சி 60 மில்லி காலை ,மாலை அல்லது 5 பாகங்களையும் நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து 1-2 கிராம் காலை, மாலை வெந்நீரில் எடுக்க நீரிழிவு கட்டுப்படும். காட்டுக் கொத்தமல்லி செடியை வேருடன் பிடுங்கி குடிநீர் காய்ச்சி 30-60 மில்லி தினம் இரு வேளை இரத்தத்தில் சீனியின் அளவிற்கு ஏற்ப பயன்படுத்தலாம்.

இடம்புரிக்காய்களை சேகரித்து 10 கிராம் அளவு எடுத்து 200 மில்லி குளிர்ந்த நீரில் இரவு முழுவதும் ஊற விட்டு அதிகாலை வடித்து குடிக்க இரத்தத்தில் சீனியின் அளவு கட்டுப்படும்.

கொவ்வை கொடியின் வேர்க்கிழங்கை சேகரித்து கழுவி இடித்து சாறு எடுத்து 15 மில்லி அளவு காலை , மதியம், இரவு சாப்பாட்டின் முன்பு எடுக்க நீரிழிவு நோய் கட்டுப்படும்.

நாவல் விதைகளை சேகரித்து பொடித்து அரித்து 2-4 கிராம் அளவு எடுத்தாலும் இரத்தத்தில் சீனியின் அளவு கட்டுப்படும்.

நிலப் பனங்கிழங்கின் வேர்க்கிழங்கை சேகரித்து கிழங்கின் மேற்றோலையும் உள் நரம்பையும் போக்கி உலர்த்தி பொடித்து 8 கிராம் பொடியுடன் ஆடை நீக்கிய பாலுடன் கலந்து காலை , மாலை உட்கொள்ள நீரிழிவு நோய் கட்டுப்படும் ,அதே வேளை நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்படும் பாத எரிச்சலையும் தணிக்கக் கூடியது.

பலாப்பழுத்த இலை , சிறு பூனைக்காலி இலைகளை சேகரித்து குடிநீர் காய்ச்சி 60 மில்லி காலை , மாலை சாப்பாட்டின் முன் கொடுக்க நீரழிவு நோய் கட்டுப்படும்.

கடுக்காய்த் தோல் , நெல்லிமுள்ளி , தான்றிக் காய்த் தோல் ஒவ்வொன்றும் சம எடை எடுத்து நிழலில் உலர்த்தி பொடித்து 1-2 கிராம் அளவு காலை ,மாலை வெந்நீரில் கலந்து எடுக்க இரத்தத்தில் சீனியின் அளவு கட்டுப்படும்.

மாங்குருத்து இலைகளை பருவ காலத்தில் சேகரித்து உலர்த்தி பொடித்த 1-2 கிராம் அளவு தினம் இருவேளையோ , மூன்று வேளையோ சாப்பிட்ட பின்பு வெந்நீரில் எடுக்க நீரிழிவு கட்டுப்படும்.


### சீந்தில்

நன்றாய் முற்றிய சீந்திற் கொடியை குளிர்ந்த நீரிலிட்டு மறுநாள் கடைந்து திப்பிலியைக் கசக்கிப் பிழிந்து நீக்கி , வெயிலில் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் வைக்க நீர் தெளியும். அந்த நீரை இறுத்துவிட்டு வேறு நீர் விட்டுக் கலக்கி மேற் கண்டபடியே நீரை இறுத்துச் சுண்ட விட்டு மறுபடியும் மேற்படியாகவே செய்து நீரை இறுத்துவிடின் பின் அடியிற் தங்கியிருக்கும்மாவே சீந்திற் சர்க்கரையாகும்.

இதை உலர்த்தி தினமும் 1 கிராம் வாயிலிட கைப்பிருக்கும். இதனால் நீரிழிவு நோய் நன்கு கட்டுப்படும்.

தொட்டாச்சுருங்கியின் இலை , வேர்களை சேகரித்து கழுவி வெட்டி நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து 2 கிராம் அளவு காலை , மாலை வெந்நீருடன் எடுக்க இரத்தத்தில் சீனியின் அளவு கட்டுப்படும்.

ஆலமரத்தின் பட்டைகளை சேகரித்து சிறு சிறு துண்டுகளாக வெட்டி 1 பங்கிற்கு 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக் காய்ச்சி 60 மில்லி காலை , மாலை அருந்தினாலும் இரத்தத்தில் சீனியின் அளவைக் கட்டுப்படுத்தலாம். அல்லது ஆல மரத்தின் பட்டைகளை சேகரித்து கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து 1-2 கிராம் அளவு தினம் இரு வேளை எடுத்து வந்தாலும் நீரிழிவு கட்டுப்படும்.







மலை வசம்பு அல்லது வெண்கோட்டச் செடியின் இலையில் ஒன்றை சேகரித்து கழுவி பச்சையாக சாப்பிட்டு வர புளிப்பாக இருக்கும்.இதனால் நீரிழிவு கட்டுப்படும். வாரத்தில் 3 நாட்கள் சாப்பிடலாம்.

தூய இன சிறு குறிஞ்சா சக்கரை கொல்லி என அழைக்கப்படும்.இச் சக்கரை கொல்லி கொல்லி மலையில் வளரக் கூடியது. இதற்கு பதிலாக சிறு குறிஞ்சா என அழைக்கப்படும் எமது பிரதேச மூலிகையின் இலைகளை பச்சடி , துவையல் , வறை தயாரித்தும் பயன்படுத்தலாம்.

அல்லது கடுக்காய் , நெல்லி வற்றல் , தான்றிக் காய் , சிறு குறிஞ்சா இலைகளை ஒவ்வொன்றும் ஒரே அளவு எடுத்து நிழலில் உலர்த்தி , பொடித்து , அரிந்து தினம் 1-2 கிராம் தினம் 3 வேளை பயன்படுத்தினாலும் நீரிழிவை கட்டுப்படுத்தலாம்.

மூலிகைகள் பக்க விளைவுகளற்றவை. எனவே நீரிழிவு நோயிற்கு மூலிகை மருத்துவம் சிறந்த இயற்கை வைத்திய முறையாகும். அதே வேளை உடற் பலத்தையும் , நோய் எதிர்ப்பாற்றலையும் பெரும்பான்மையான மூலிகைகள் ஏற்படுத்தக் கூடியதாகவும் அமைந்து விடுகின்றது.

இரவில் வெந்தயத்தை நீரில் ஊறப்போட்டு அதிகாலையில் அந்நீரையும் பருகி வெந்தயத்தை விழுங்கி விடவும் (200 மில்லி நீரில் 8 கிராம் வெந்தயத்தை ஊறவிடவும்).

வெந்தயத்தை நீரில் 3 மணி நேரம் ஊறவைத்து வடித்து அந்த நீரில் தேநீர் தயாரித்து எடுத்தாலும் இரத்தத்தில் சீனியின் அளவு கட்டுப்படும் , தேநீருக்கு சீனி பயன்படுத்தக் கூடாது.

நீரில் ஊறவைக்காமல் வெந்தயத்தை விழுங்குவதால் நற்பயன்கள் மருத்துவப் பண்புகள் கிடைக்காமல் போய்விடும்.



### சுண்டக்காய்

200 கிராம் , வெந்தயம் 8 கிராம் , பாதியாக வெட்டிய சுண்டக்காயை வெறும் வாணலியில் எண்ணெய் விடாமல் வறுத்து 4 நிமிடங்களுக்கு கிட்ட வறுத்து 5 கிராம் வெந்தயத்தை சேர்த்து வறுத்து இறக்கி சூடு ஆறும் வரை விட்டு மிக்ஸியில் அரைத்து பொடியாக்கவும்-காலையில் 1 தேக்கரண்டி சாப்பிடலாம் அல்லது 1 தேக்கரண்டி எடுத்து குடிநீர் காய்ச்சி 100 மில்லி அளவு குடிநீராக பருகலாம்.

சுண்டக்காயில் உயிர்ச்சத்து ஏ நார்ச்சத்து அதிகமாக காணப்படுகிறது குறிப்பிடப்பட வேண்டிய விடயம்.

நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்படும் உடற் சோர்வை நீக்கலாம். வெந்தயம் 100 கிராம் , கருஞ்சீரகம் 50 கிராம் , ஓமம் 30 கிராம் எல்லா வற்றையும் தனித்தனியாக மெல்லிய நெருப்பில் இளவறுவலாக வறுத்து எடுத்து 3 இனையும் சேர்த்த பொடித்து அரிந்து வைத்துக் கொள்ளவும்.

8 கிராம் அளவு தினமும் ஒரு வேளை 48 நாட்கள் தொடர்ச்சியாக எடுத்து வர இரத்தத்தில் சீனி யின் அளவு கட்டுப்படும்.

வேப்பிலை 5 , முருங்கையிலை 2 நெட்டின் இலைகள் இரண்டையும் சேர்த்து வெறும் வயிற்றில் மென்று சாப்பிட்டு 1டம்ளர் சுத்தமான நீரை குடிக்கவும்.

இரத்தத்தில் சீனியின் அளவு கட்டுப்படுத்துவதுடன் இரத்தத்தையும் சுத்திகரிக்கும். செரிமானத்தையும் சீராக்கும். தொடர்ச்சியாக 40 நாட்கள் பயன்படுத்தலாம்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர பாதை அமைக்கக்கோரி போராட்டத்தில் குதித்த மக்கள்



(கண்டாவளை)

நேற்று கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ரங்கன் குடியிருப்பு பகுதியில் நிரந்தர பாதைக்காக குறித்த கிராம மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 130 குடும்பங்கள் 28 வருடங்களாக வாழ்ந்து வரும் நிலையில் அவர்களுக்கான ஓர் நிரந்தரப் பாதையினை அமைத்து தருவதற்கு பலரும் முன்வந்திருந்த பொழுதிலும் தனியார் ஒருவர் வீதிக்காக காணியினை வழங்க முன்வராத நிலையில் மழை வெள்ளங்களில் பாடசாலை மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் அவசர தேவை கருதி வைத்திய சேவையினையும் பெற முடியாத நிலையில் பெரிதும் சிரமப்படுவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.


இப்பிரச்சினை தொடர்பாக பல அதிகாரிகளிடம் சென்ற பொழுதிலும் எந்த தீர்வும் எட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பாதைக்கு தடையாக உள்ள காணி உரிமையாளர் இப்பகுதி மக்களின் நலன் கருதி வீதிக்கான காணியினை வழங்க முன்வர வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

தற்பொழுது காணி கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் இதன் காரணமாக வீதி ஊடாக இரவு வேளைகளில் பெரும் அச்சநிலையில் செல்ல வேண்டியுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகள் காணி உரிமையாளரிடமிருந்து எமது வீதிக்கான காணியினை பெற்று புதிய வீதியினை புனரமைத்து தருமாறும் கோரிக்கை விடுத்தனர். (நி-316)

# தியாக தீபம் திலீபனுக்கு கிளிநொச்சியில் அஞ்சலி





(தருமபுரம்)

இலங்கை தமிழரசுக் கட்சி கிளிநொச்சி மாவட்ட கிளையினால் வட்டக்கச்சி பொதுச் சந்தைக்கு முன்பாக இராசையா திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் தலைமையில் நடைபெற்றது. (நி-316)

# இரணைமடுக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சிறுபோகத்தின் போது இடம்பெற்ற முறைகேடுகள்

## நடவடிக்கை எடுக்குமாறு கமநல திணைக்களத்திற்கு அரச அதிபர் கடிதம்

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் கடந்த 2022 ஆம் மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக பயிர்ச்செய்கைகளில் இடம்பெற்ற முறைகேடுகள் மற்றும் நீர்வரிப் பங்குகள் மாற்றம் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளருக்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக்குளத்தின் கீழ் கடந்த 2022 ஆம் ஆண்டில் பெரும்போக அறுவடை நிறைவு பெற்றதன் பின்னரும் குளத்தில் முழுமையாக நீர் தேங்கிய நிலையில் காணப்பட்டதையடுத்து 21ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டதுடன் இரணைமடுக்குளத்தின் கீழான நீர்ப்பாசன எல்லைப் பரப்பு தவிர்ந்த கோரக்கண்கட்டு, பெரியபரந்தன், குமரபுரம் ஆகிய பகுதிகளிலும் மானாவாரி வயற்காணிகளை கொண்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு குறித்த பிரதேசங்களுக்கு பரீட்சார்த்தமாக சிறுபோக செய்கைகளுக்கும் அனுமதிகள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் கோரக்கண்கட்டு பகுதியில் கடந்த 2022 ஆம் ஆண்டு சிறுபோகச் செய்கையில் நீதியற்ற முறையில் பாரபட்சமாகவும் சிறுபோக பங்குகள் வழங்கப்பட்டதாகவும் குறித்த பகுதி கமக்கார அமைப்பின் தலைவர் மற்றும் அதன் நிர்வாகத்தினரை சேர்ந்தவர்களை அவர்களது உறவினர்கள் மாத்திரமே ஒதுக்கீடு செய்த நிலப்பரப்புகளில் பயிர்ச் செய்கை மேற்கொண்டதாகவும் இதனால் தாங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் குறித்த பிரதேச விவசாயிகள் மாவட்ட அரச அதிபர் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் மற்றும் துறை சார்ந்த திணைக்களங்களுக்கு முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனை அடுத்து இது தொடர்பில் மாவட்ட அரச அதிபரால் மேலதிக அரச அதிபர் தலைமையிலான குழு நியமிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

குறித்த விசாரணைகளில் மேற்படி குற்றச்சாட்டுக்கள் கண்டறியப்பட்டதை அடுத்து முறைகேடுகளில் ஈடுபட்ட விவசாய அமைப்புக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளருக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை கடந்த 2023 ஆம் ஆண்டு சிறுபோக பயிர்ச் செய்கையின் போது இரணைமடுக்குளத்தின் கீழுள்ள புலிங்கதேவன் முறிப்பு கமக்கார அமைப்பினரால் சுமார் 716 ஏக்கர் வரையான சிறுபோக பங்குகள் பயிர்ச் செய்கை குழு கூட்டத் தீர்மானங்களுக்கு மாறாகவும், கமநல சேவை நிலையங்களுக்கிடையில் பங்கு மாற்றம் செய்யப்படாமலும் வெளியிடங்களுக்கு தண்ணீர்ப்பங்குகள் முறையற்ற விதத்திலே கொண்டு செல்லப்பட்டமை மற்றும் வாழ்வாதார செய்கைகளில் ஈடுபட்டுவரும் ஏழை விவசாயிகளுக்கு சொந்தமான பங்குகள் கமக்கார அமைப்பினரால் தடுத்து நிறுத்தப்பட்டு அவை இரகசியமான முறையிலே பெருந்தொகை பணத்துக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமையும் விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

அதாவது இவ்வாறான முறைகேடுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட அரச அதிபரால் ஏற்கனவே குழு ஒன்று நியமிக்கப்பட்டு இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. குறித்த முறைப்பாட்டின் அடிப்படையிலும் மேற்படி தண்ணீர்ப் பங்குகள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டமை, குறித்த பிரதேச விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய பங்குகளை வழங்காது அதனை தடுத்து விட்டு அதனை வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டமை எனப் பல்வேறு முறைகேடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இவ்வாறான குற்றச்சாட்டுகளில் ஈடுபட்ட அமைப்புகளுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட அரச அதிபரால் அறிவுறுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (நி-315)



கிளிநொச்சி மாவீரர் போராளி குடும்ப நல காப்பகத்தின் ஏற்பாட்டில் நேற்று வட்டக்கச்சி பிரதேச வைத்திய சாலையில் குருதிக் கொடை முகாம் இடம் பெற்றது. (படம்-தேவானந்தன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 150 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 450 | 450 |
| தக்காளி | 200 | 200 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 180 | 180 | 200 |
| கோவா | 150 | 140 | 150 | 200 |
| கரட் | 400 | 240 | 250 | 280 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 |
| புடோல் | 80 | 80 | 100 | 200 |
| வாழைக்காய் | 200 | 160 | 180 | 240 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 400 |
| வெண்டக்காய் | 100 | 120 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 160 | 200 |
| பயற்றங்காய் | 300 | 270 | 160 | 200 |
| லீக்ஸ் | 160 | 130 | 150 | 150 |
| பீற்றூட் | 140 | 100 | 180 | 160 |
| கறிமிளகாய் | 250 | 300 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 150 | 100 |
| போஞ்சி | 400 | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 150 | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 60 | 80 |
| தேசிக்காய் | 1000 | 1200 | 1200 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 450 | 350 | 400 |
| வெங்காயப்பூ | 250 | 300 | -- | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 170 | 40 | 60 |
| ஈரப்பலா | 80 | 80 | 60 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர்

291





எட்டாம் அத்தியாயம்
பூதத் தீவு

வானமாதேவி இருக்கிறாளே, அவள் புத்தி விசாலத்தில் மனித குலத்தை ஒத்தவள்தான் போலும்! பரஞ்சோதியாகிய இறைவனை மனிதர்கள் தங்கள் இதய ஆகாசத்திலிருந்து நழுவிச் செல்ல விட்டு விடுகிறார்கள். பிறகு இருண்ட ஆலயங்களின் பிரகாரங்களிலும், கர்ப்பக் கிருஹங்களிலும் லட்சதீபம் ஏற்றி அந்தப் பரஞ்சோதியைத் தேடுகிறார்கள்.

வானமாதேவியும் அத்தகைய புத்திசாலித்தனமான காரியத்தைத் தினந்தோறும் செய்கிறாள்! ஜோதிமயமான சூரிய பகவானைத் தன் வசத்திலிருந்து கடலில் நழுவ விட்டு விடுகிறாள். பிறகு தன் நாதனைக் காணவில்லையே என்ற கவலை அவளுக்கு உண்டாகிவிடுகிறது. லட்சதீபம் ஏற்றிச் சூரியனைத் தேடுகிறாள்! லட்சதீபம் மட்டுமா ஏற்றுகிறாள்? கோடானு கோடி தூங்கா விளக்குகளை ஏற்றி இரவெல்லாம் அவளும் தூங்காமல் சூரியனைத் தேடிக் கொண்டிருக்கிறாள்!

வந்தியத்தேவன் தனக்கு உணர்வு வந்து கண்ணைத் திறந்து பார்த்தபோது, தன் கண்முன்னே பல்லாயிரம் தீபச் சுடர்கள் மின்னுவதைக் கண்டான் எந்தக் கோவிலிலே இவ்வளவு அலங்காரமாக லட்சதீபம் ஏற்றியிருக்கிறார்கள் என்று வியந்தான். பின்னர், அவை தீபங்கள் அல்லவென்றும் வானத்தில் சுடர்விடும் நட்சத்திரங்கள் என்றும் உணர்ந்தான். படகில் தான் அண்ணாந்து படுத்திருப்பதையும் தன் இடுப்பைச் சுற்றி ஈரத்துணியின் மீது கயிறு ஒன்று கட்டியிருப்பதையும் அறிந்தான். ஜிலுஜிலுவென்று குளிர்ந்த காற்று அவன் உடல் மீது பட்டு அவனுக்கு எல்லையற்ற சுகத்தையும் அமைதியையும் அளித்தது. அமைதியான கடலில் எழுந்த ஓங்கார நாதம் அவன் உள்ளத்தில் அபூர்வமான சாந்தியை உண்டாக்கியது.

அந்த நாதத்தினிடையே ஒரு கீதமும் கேட்டது. அது என்ன கீதம்? அதை அவன் இதற்கு முன் எங்கே, எப்பொழுதோ கேட்டிருக்கிறான்?

“வாரிதியும் அடங்கி நிற்க
மாருதமும் தவழ்ந்து வர
காரிகையென் உள்ளந்தனிலே
காற்று சுழன் றடிப்பதுமேன்?
அலை கடலும் ஓய்ந்திருக்க
அகக்கடல்தான்
பொங்குவதேன்?

ஆகா! அந்த விசித்திரமான பெண்! பூங்குழலி! சற்று நிமிர்ந்து உட்கார்ந்து எதிரே பார்த்தான். ஆம், அவள்தான்! படகு தள்ளிக் கொண்டிருக்கிறாள்! அந்தச் சோக கீதத்தைப் பாடிக்கொண்டு படகு வலிக்கிறாள்! காரிருளிலே ஒரு மின்னல் மின்னிப் பல பொருள்களை ஒருநொடிப் பொழுதில் காட்டிவிடுவது போல முன்னிரவில் நடந்ததெல்லாம் வந்தியத்தேவனுக்குப் பளிச்சென்று ஞாபகம் வந்தது. அதாவது, அவன் கடலில் தத்தளித்தபோது பூங்குழலியும் கடலில் குதித்து அவனை நோக்கி வந்தது வரையிலேதான். பிறகு நடந்தது ஒன்றும் அவனுக்கு நினைவில் இல்லை. தன்னை அந்தப் பெண் காப்பாற்றிப் படகில் ஏற்றியிருக்க வேண்டும். படகு அசையும்போதுதான் மீண்டும் கடலில் விழுந்து விடாமலிருப்பதற்காக இடுப்பில் கயிற்றைச் சுற்றிப் படகின் குறுக்குக் கட்டையில் சேர்த்துக் கட்டியிருக்கிறாள். கயிறு உடம்பின் தோலில் பட்டு வலிக்காதபடி அரை ஆடையின் மீது சுற்றிக் கட்டியிருக்கிறாள். இடுப்புத்துணியைச் சுற்றியிருந்த அரைச் சுருளை வந்தியத்தேவன் தொட்டுப் பார்த்துக் கொண்டான். பணமும் ஓலையும் பத்திரமாயிருக்கக் கண்டான்.


‘ஆகா! இந்தப் பெண்மீதுதான் சந்தேகங் கொண்டது எவ்வளவு பெரிய தவறு! வேறு விதமான துர்நோக்கம் இவளுக்கு இருந்தால் தன்னைக் காப்பாற்றியிருக்க வேண்டிய அவசியமில்லையே?

(தொடரும்...)



## சிறுவர் அரங்கம்

### ஆமையும் அன்னங்களும்



ஒரு ஊர்ல அழகான குளம் ஒன்னு இருந்துச்சு. அங்க நிறைய பறவையினங்கள் வாழ் உயிரினங்கள் சந்தோசமா இருந்தன. அதே இடத்தில ஒரு ஆமையும் ரெண்டு அன்னப்பறவைகளும் நண்பர்களாக இருந்தன. மிகவும் மகிழ்ச்சியாக சுற்றி திரிந்தன. வழக்கம்போல கோடைக்காலம் வந்துச்சு.

இந்த முறை நீர்வறட்சி அதிகமானதால் குளம் வற்றத் தொடங்கியது. அங்க இருந்த உயிரினங்கள் எல்லாம் இடம்பெயர தொடங்கின. ஒரு கட்டத்துல குளம் முழுவதும் வற்றத் தொடங்கியது. அன்னப்பறவைகள் கவலையாக இருந்தன. அப்போ அங்க வந்த ஆமை “நண்பா கவலைப்படாதீங்க. பருவமழை வரும், நம்ம குளத்துல மறுபடியும் தண்ணீர் பெருகும். போன நண்பர்கள் எல்லாம் திரும்ப வருவாங்க.

இங்க சந்தோசமா இருக்கலாம்னு” சொல்லுச்சு. அதற்கு அன்னங்கள், “நண்பா உன்னால தண்ணியிலும் வாழமுடியும், தரையிலும் வாழமுடியும். ஆனால் எங்களுக்கு அப்படி இல்லையே. நாங்க வேற இடத்துக்கு கண்டிப்பா போக வேணும்னு” சொன்னாங்க. ஆமையோ அப்போ “நீங்க முன்னாடி போங்க. நான் உங்க பின்னாடி வர்றேன்” என்றது.

“அட ஆமையே, நீ [illegible] வால்ல. நீ வரதுக்குள்ள கோடைக் காலமே முடிஞ்சுரும்னு சொன்னாங்க. அதற்கு ஆமை சோகமாக, அப்போ நீங்க போங்க. கோடை காலம் முடிஞ்சதும் இங்க வாங்க.

நா உங்களுக்காக காத்துட்டு இருக்கேன்னு சொல்லுச்சு. உன்ன விட்டுட்டு எப்படி போவோம். நாம மூணு பேரும் ஒண்ணா போறதுக்கு வழிய பாக்கணும் என்று கூறியது. மூன்றும் சிந்தனையில் மூழ்கின.

மறுநாள் ஆனது. ஆமை தன்னால் முடிந்த வேகத்தில் அன்னங்களிடம் ஓடி வந்தது. அன்னமோ, “ஆமை நண்பா என்ன இப்படி வர்ற” என கேட்டது.

ஆமை சொன்னது, என்னிடம் ஒரு யோசனை உள்ளது. அதை சொல்லதான் வந்துருக்கே”, என்று. முதல்ல நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து இதே மாதிரி அழகான குளத்தை கண்டுபிடிங்க.

அப்ரோ வந்து என்னையும் கூட்டிட்டு போலாம்னு சொல்லுச்சு” அன்னமோ ஆச்சர்யமாக, “எப்படி நண்பா? என்று வினவியது.” சொல்ற நண்பா. நீங்க சீக்கரம் ஒரு நல்ல குளத்தை கண்டு புடிச்சுட்டு வாங்கனு” சொன்னது. இரண்டும் புரியாமல் ஆமை நண்பனை நம்பி வேறு குளத்தை பார்க்க சென்றன.

வேறு குளம் பார்ப்பது அன்னங்களுக்கு அவ்வளவுக்கு எளிதாக இல்லை. மனித இனம் தொடர்ந்து காடு, குளம், குட்டைகளை அழித்து வருவதால் உயிரினங்களுக்கான நீர்ஆதாரங்களே மிகவும் குறைந்து விட்டன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய விஷயத்தில் நியாயம் தவறுபவன், பெரிய விஷயத்திலும் தொடருவான்.

– இயேசுநாதர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரசியல் இராஜதந்திரத்தில் மீண்டும் மீண்டும் தோல்வி...

இலங்கையில் சிங்களவர்கள் இருக்கிறார்கள், தமிழர்கள் இருக்கிறார்கள். முஸ்லிம்கள் இருக்கிறார்கள். ஆனால் இலங்கையில் இலங்கையர்கள் இல்லை.

இதுவே இந்த நாட்டின் வீழ்ச்சிக்கு மூல காரணமாகும்.

ஆம், அண்டைநாடான இந்தியாவில் நூற்றுக்கணக்கான மொழிகளைப் பேசுகின்ற பல்லின மக்கள் வாழ்கின்றனர்.

தவிர, இந்திய சனத்தொகை 140 கோடியைக் கடந்துவிட்டது.

ஆயினும் இந்திய தேசம் சர்வதேச அரங்கில் அபரிதமான வளர்ச்சியை அடைந்துள்ளது.

இதற்குக் காரணம் அங்கு எத்தனையோ இன மக்கள் வாழ்ந்தாலும் அவர்கள் ஒவ்வொருவரும் இந்தியர்களாக வாழ்கின்றனர். அதுவே இந்தியாவின் அபரிதமான முன்னேற்றத்துக்கு அடிப்படையாக அமைகிறது.

இதைக்கூறும்போது அழகிய இலங்காபுரியில் ஏன்தான் இப்படியொரு சாபக்கேடு என்று எண்ணத்தோன்றும்.

உண்மை. மிகக்குறைந்த மக்கள் தொகை. மூவின மக்கள் வாழ்கின்ற மிகச் சிறிய நாடு. இயற்கை அழகு. இதிகாச வரலாறுகளுடன் சம்பந்தப்பட்ட மிகத் தொன்மையான தேசம்.

இறை நம்பிக்கை மிகுந்த மக்கள் என எல்லாம் இருந்தும் காலத்துக்குக் காலம் மூட்டப்படும் இனவாதத் தீ இந்த நாட்டை சங்காரம் செய்கிறது.

அமைதியை ஏற்படுத்த வேண்டிய மதத் தலைவர்கள் இனவாதத்தை – மதவாதத்தைத் தூண்டி இந்த நாட்டை சாம்பல் மேடாக ஆக்குவதில் ஆர்வம் கொண்டுள்ளனர்.

அதேசமயம் இனப் பிரச்சினைக்கான தீர்வை தொடர்ச்சியாக வலியுறுத்தி அதற்கு ஒரு முடிவைக் காண வேண்டிய தமிழ் அரசியல் தரப்புகள் இனப் பிரச்சினை நீடிப்பதை விரும்புவது போல இடையிடையே மௌனம் காக்கின்றனர்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வை முன்வைத்தே ஆக வேண்டும் என்பதை வலியுறுத்துவதில் இருந்து அவர்கள் பின்னடிப்பதைப் பார்க்கும்போது, இனப் பிரச்சினை என்ற நோய்க்கு முடிவு கட்டினால், தங்களின் அரசியல் வாழ்வு அஸ்தமனமாகிவிடும் என்று நினைப்பதுபோல அவர்களின் செயற்பாடுகள் உள்ளன.

இதுதவிர, தத்தம் அரசியல் கட்சிகளின் நன்மைக்காக அவர்கள் செய்கின்ற நிகழ்வுகள் ஒவ்வொன்றும் தமிழ் மக்கள் மத்தியில் எதிர்விளைவை ஏற்படுத்தி நிற்பதைப் பார்க்க முடிகிறது.

இதற்கும் மேலாக, தமிழ் அரசியல் தரப்புகள் முன்னெடுத்த அரசியல் நகர்வுகள், அரசியல் இராஜதந்திரங்கள் என அத்தனையும் மீண்டும் மீண்டும் தோல்வி என்பதாகவே முடிந்து போகிறது.

எனவே இனியேனும் இதுபற்றிய மீளாய்வுகளைத் தமிழ்த் தரப்புகள் செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் தமிழ் மக்களின் மனநிலை எதிர்வினையாற்றுவதை தடுக்க முடியாது.

# திருடர்களை மடக்கிப் பிடித்தாலும் அவர்களை எவரும் தாக்கக் கூடாது

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

பல்பொருள் அங்காடிகளிலோ அல்லது வேறு கடைகளிலோ பொருட்களைத் திருடும் நபர்கள் மீது தாக்குதல் நடத்தப்படாது அவர்களைப் பற்றி அருகில் உள்ள பொலிஸாருக்கு அறிவித்து அவர்களை பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ கேட்டுக்கொள்கிறார்.

பொருட்கள் திருட்டு குறித்து விசாரணை நடத்த பொலிஸார் இருக்கும் போது, பொருட்களை திருடிய குற்றத்திற்காக யாரையும் தாக்க முடியாது.

சட்டத்தை கையில் எடுத்துக்கொண்டு யாரையும் தாக்க எவருக்கும் உரிமை இல்லை எனவும், இது தொடர்பில் பல்பொருள் அங்காடிகளின் முகாமையாளர்கள் அனைத்து ஊழியர்களுக்கும் தெரிவிக்க வேண்டும்.

பொரளையில் உள்ள பல்பொருள் அங்காடியில் பொருட்களை திருடிய யுவதியை ஊழியர்கள் குழுவொன்று தாக்கும் காணொளி சமூக ஊடகங்களில் பரவி வருவதாகவும், தாக்குதல் சம்பவத்தை மன்னிக்க முடியாது.

கடையில் யாரேனும் பொருட்களை திருடிச் சென்றதாக சந்தேகம் ஏற்பட்டால், அவர்களை தாக்குவது மாற்று வழி அல்ல என்றும், பணியாளர்கள் இது குறித்து பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தெரிவித்து பொலிஸில் ஒப்படைக்க வேண்டும்.

ஹன்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய யுவதி ஒருவரே இவ்வாறு தாக்கப்பட்டதாகவும், அவர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் எனவும்

இந்த பெண் போதைப் பொருள் பாவனைக்காக பொருட்களை திருடியுள்ளதாகவும், கடைகளில் பொருட்களை திருடியதற்காக இவருக்கு எதிராக பல வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (7)

### மேல் மாகாண ஆசிரியர் ஆட்சேர்ப்பு

## திறந்த் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

மேல்மகாணத்திலுள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச்செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இது தொடர்பிலான விசேட வர்த்தமானியும் வெளியிடப்பட்டது.

எதிர்வரும் 09.10.2023 ஆம் திகதிவரை விண்ணப்பங்களுக்காக இறுதி திகதி வரையறுக்கப்பட்டுள்ளது.

மேலும் http://apps.wp.gov.lk/ psc/page_id=1008 என்ற இணைப்பினூடாக விண்ணப்பங்களை தரவிறக்கம் செய்து கொள்ளலாம் எனவும் மாகாண உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது. (7)

## விண்ணப்பம் கோரல்

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை அஞ்சலகம் நடத்தும் வடமராட்சி எல்லைக்கு உட்பட்ட அரச நிறுவனங்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

7 வீரர்கள் 5 ஓவர்கள் கொண்ட இப் போட்டிக்கான விண்ணப்ப படிவங்களை பருத்தித்துறை அஞ்சல் அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நேரடியாகவே அல்லது அஞ்சலக முகவரிக்கோ அனுப்பி வைக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

போட்டிகள் எதிர்வரும் ஐப்பசி மாதம் 08 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடாத்தஏற்பாடாகிஉள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

### இந்தியா– இலங்கை

## தொழிநுட்ப - பொருளாதார ஒப்பந்தம் தொடர்பில் பேச்சுவார்த்தை ஆரம்பம்

(கொழும்பு)

பொருளாதார மற்றும் தொழிநுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் தொடர்பாக இலங்கையும் இந்தியாவும் மீண்டும் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளன.

பொருளாதார மற்றும் தொழிநுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது குறித்து கலந்துரையாடுவதற்காக இலங்கை மற்றும் இந்தியாவின் பிரதிநிதிகளுடன் சந்திப்பொன்றை நடத்தியதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த ஒப்பந்தம் புதுடெல்லியில் முன்மொழியப்பட்ட நிலையில், இந்திய மற்றும் இலங்கை தரப்புகளுக்கு இடையில் நான்காவது வர்த்தக செயலாளர் மட்ட பேச்சு வார்த்தையின் போது இது பற்றிய ஆரம்ப விவா தங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## இந்திய முட்டையால் நிபா வைரஸ் பரவுமா?

### விவசாய அமைச்சு ஆய்வு

(கொழும்பு)

முட்டை உள்ளிட்ட உணவுப் பொருட்களின் இறக்குமதி மூலம் நாட்டிற்குள் நிபா வைரஸ் பரவும் அபாயம் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட்டு வருவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணை குறித்து சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, நிபா வைரஸ் இலங்கைக்குள் பிரவேசிக்கும் அபாயம் மிகவும் குறைவு என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் கேரள மாநிலத்தில் நிபா வைரஸ் பரவும் அபாயம் கடந்த மூன்று வருடங்களில் பல தடவைகள் முன்னிலைப் படுத்தப்பட்ட போதிலும் அது இலங்கையில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

நிபா வைரஸ் குறித்து மக்கள் தேவையில்லாமல் அச்சமடைய தேவையில்லை என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** ஓமினி அலுமினியம் தொழிற்சாலை கரந்தன், அரசகேசரி பிள்ளையார் கோவிலடி, நீர்வேலி, கரந்தன். மாலை வைரபர் கோவிலடி போயிட்டி, பொக்கணை, ஊரெழு அம்மன் கோவில், சீனோர் படகுதுறை (காரைநகர்), கடற்படைத்தளம் காரைநகர், காரைநகர் கடற்படைமுகாம். இ.போ.ச டிப்போ காரைநகர், களபூமி பாலக்காடு அம்மன் கோவிலடி- காரைநகர், தோப்புக்காடு காரைநகர், ஊரி- காரைநகர் **மன்னார் பிரதேசத்தில்** ஆனாழ் நகர்,வங்காலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## பேருந்தை வழிமறித்து சாரதி கடத்தப்பட்டார்

கம்பளை பிரதேசத்தில் பஸ் சாரதி ஒருவர் கடத்தப்பட்டுள்ளார். நேற்றுக்காலை மாவெலயில் இருந்து கம்பளை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸின் சாரதியே இவ்வாறு கடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் பயணித்துக் கொண்டிருந்த போது வாகனம் ஒன்றை நிறுத்தி பஸ்ஸுக்கு தடையை ஏற்படுத்தி இக் கடத்தல் நடைபெற்றுள்ளது. கடத்தப்பட்டவர் வத்தேகம பகுதியைச் சேர்ந்த 46 வயதுடையவர் என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரின் இனம் சாரா அரசியல் ஒன்பதாவது குடியரசுத் தலைவராக இலங்கை வம்சாவளித் தமிழர் தர்மன் தெரிவு

07

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



அரசாங்கத்தின் அலுவல்கள், வணிகம், கல்வி போன்றவை ஆங்கிலத்திலேயே நடக்கின்றன. சிங்கப்பூரின் அரசியலமைப்பு மற்றும் சட்டங்கள் ஆங்கிலத்திலேயே உள்ளன. நீதிமன்றத்தின் மொழியாகவும் ஆங்கிலமே உள்ளது. நீதிமன்றத்தில் ஆங்கிலம் அல்லாத மற்ற மொழியில் முறையிட வேண்டும் என்றால் மொழி பெயர்ப்பாளர் தேவை. 20 விழுக்காடு சிங்கப்பூர் மக்களுக்கு ஆங்கிலத்தில் படிக்கவோ எழுதவோ தெரியாது. 2010ஆம் ஆண்டு கணக்கின்படி 71 விழுக்காடு மக்களுக்கு இரண்டு அல்லது அதற்கு அதிகமான மொழிகள் தெரியும். சிங்கப்பூரில் பெரும்பான்மை (பாதி மக்கள்) மக்களின் மொழியாக சீனம் உள்ளது.

### சிங்கப்பூரில் அரச அங்கீகாரம் பெற்ற தமிழ் மொழி

சிங்கப்பூர் சனத்தொகையில் தமிழர்கள் குறிப்பிடத்தக்க சிறுபான்மையினராக இருப்பதால், சிங்கப்பூரில் தமிழ் ஒரு அரச அங்கீகாரம் பெற்ற மொழியாக இருக்கின்றது.

### அன்றிலிருந்து ஆட்சியில் இருக்கும் மக்கள் செயல் கட்சியில் தமிழர்களின் பங்கு

சிங்கப்பூரில் தமிழர்கள் 200 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்துவருகின்றனர். ஆனால் "தமிழர்" என்ற சொல் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்துதான் சிங்கப்பூரில் வழக்கத்துக்கு வரத்தொடங்கியது. அதற்கு முன்னர் சூலியா, கிலிங் ஆகிய பெயர்களால் தமிழர்கள் அழைக்கப்பட்டனர் என்று கூறப்படுகிறது. ஆனால் விக்கிப்பீடிய (wikipedia.) தகவலின்படி தமிழ் பின்புலத்துடன் சிங்கப்பூரில் வசிக்கும் தமிழர்களை சிங்கப்பூர் தமிழர் என்பர். காலனித்துவ காலப்பகுதியில் (1800 களில்) பிரித்தானிய அரசால் வேலை செய்வதற்கென்று தமிழ்நாட்டில் இருந்து அழைத்து செல்லப்பட்டவர்களின் வம்சாவளியினரே, பெரும்பாலான சிங்கப்பூர் தமிழர்கள் ஆவார்கள். கணிசமான தொகையினர் யாழ்ப்பாணத்தில் இருந்தும் இங்கு வரவழைக்கப்பட்டவர்கள். சிங்கப்பூர் சனத்தொகையில் தமிழர்கள் குறிப்பிடத்தக்க சிறுபான்மையினராக இருப்பதால், சிங்கப்பூரில் தமிழ் ஒரு அரச அங்கீகாரம் பெற்ற மொழியாக இருக்கின்றது.

தமிழர் அரசியல் பன்முகப்பட்டது, வெவ்வேறு செல்வாக்கு அதிகார வட்டங்களுக்கு உட்பட்டது. என்றும் இன்றும் தமிழர் அனைவரும் ஒரே அரசியல் அலகின் கீழ் இயங்கியது இல்லை. இன்று தமிழர்களுக்கு அவரவர் வாழும் நாடுகளின் அரசியலே முதன்மை பெறுகின்றது. உலகத் தமிழர்களுக்கென ஒரு வலுவான அமைப்போ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைமைத்துவமோ இல்லை. இருப்பினும் உலகத்தமிழர் தமிழர் பிரச்சினைகளுக்கு குரல்கொடுத்தும், தமிழர் நலன்களின் மீது அக்கறை காட்டியும் செயற்படுகின்றார்கள்.

சிங்கப்பூர் நாட்டின் அரசியல் அரங்கிலும் தமிழர்கள் பெரிதும் மதிக்கப்படுகிறார்கள். சின்னத்தம்பி இராசரத்தினம் 1965 இல் சிங்கப்பூர் சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து சிங்கப்பூரின் முதல் வெளியுறவு மந்திரியாக இருந்தவர். சிங்கபூரின் துணைத்தலைமை அமைச்சராக 1980-1985 காலப்பகுதியில் பணியாற்றியவர்.



சி. ராஜரத்தினம்

இவர் 1959 முதல் 1988 வரையிலான நெடுங்காலம் சிங்கப்பூர் அரச அமைச்சரவையில் பணியாற்றியுள்ளார்.

இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள வட்டுக்கோட்டை சித்தங்கேணியில் 1915 இல் பிறந்தார். அவரது 90ஆவது வயதில் காலமானார். சிங்கப்பூர் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் தன்னுடைய ஒரு கல்வித்துறைக்கு எஸ். இராசரத்தினம் பன்னாட்டுத்துறைக் கல்வி என்று இவர் பெயரைச் சூட்டிப் பெருமைப் படுத்தியுள்ளது.



எஸ். ஆர். நாதன்

சிங்கப்பூரின் அதிபராக நாதன் என்ற தமிழர் சிறப்பாகச் செயற்பட்டிருக்கிறார். எஸ். ஆர். நாதன் என்று அழைக்கப்படும் செல்லப்பன் ராமநாதன் சிங்கப்பூரின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆவார். இவர் செப்டம்பர் 1, 1999 முதல் குடியரசுத் தலைவராகப் பதவி வகித்து வந்தவர். இவர் 2005 ஆம் ஆண்டு மறுபடியும் தேர்ந் தெடுக்கப்பட்டார். 2009 இல், அவர் சிங்கப்பூரின் நீண்ட காலம் சேவை செய்த தலைவர் ஆகினார். அவரது அலுவலக காலம் ஒகஸ்ட் 31, 2011 அன்று முடிவடைந்தது. 2016 ஆம் ஆண்டு காலமானார்.

தர்மன் சண்முகரத்தினம் சிங்கப்பூரின் அரசியல்வாதி ஆவார். மக்கள் செயல் கட்சியின் உறுப்பினரான இவர் 2007 ஆம் ஆண்டில் இருந்து சிங்கப்பூரின் நிதி அமைச்சராகப் பொறுப்பில் உள்ளார். 2011 ஆம் ஆண்டு மே மாதத்தில் இடம்பெற்ற தேர்தல்களை அடுத்து இவர் நாட்டின் துணைப் பிரதமராகவும் நிதி அமைச்சு பொறுப்புடன் கூடுதலாக மனிதவள அமைச்சராகவும் உள்ளார். 2003 ஆம் ஆண்டு முதல் 2008 வரையான காலப்பகுதியில் இவர் கல்வி அமைச்சராகவும் இருந்தார். இவர் தற்போது ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

### இவரது பாட்டனார் இலங்கை, யாழ்ப்பாண மாவட்டம், ஊரெழு என்ற ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

சிங்கப்பூர் அமைச்சரவையில் சட்டத்துறை மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சராக சண்முகம், வெளியுறவுத்துறை அமைச்சராக விவியன் பாலகிருஷ்ணன், கல்வி மற்றும் நிதித்துறை இரண்டாவது அமைச்சராக இந்திராணி, தகவல் தொழில்நுட்ப அமைச்சராக ஈஸ்வரன் ஆகிய தமிழர்களும் கோலோச்சி வருகிறார்கள். அமெரிக்க அதிபர் ட்ரம்ப், வடகொரிய அதிபர் கிம் ஆகிய இருவரையும் சிங்கப்பூரில் சந்திக்க வைத்ததில் தமிழ் அமைச்சர்களின் பங்கு மகத்தானது. குறைந்த எண்ணிக்கையினரான தமிழர்கள், சிங்கப்பூரின் அரசியல், பொருளியல், கலாசார வளர்ச்சியில் ஆற்றிய பங்கு அளப்பரியது. 1968இலிருந்து மக்கள் செயல் கட்சியிலிருந்து நாடாளுமன்றத்திற்கு தெரிவான தமிழ் உறுப்பினர்களின் எண்ணிக்கை (A) அட்டவணை-3இல் தரப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்திற்கு தெரிவான தமிழ் உறுப்பினர்களின் எண்ணிக்கை அட்டணை-3

| ஆண்டு | (A) | ஆண்டு | (A) | ஆண்டு | (A) |
|---|---|---|---|---|---|
| 1968 | 5 | 1988 | 4 | 2011 | 9 |
| 1972 | 4 | 1991 | 5 | 2015 | 8 |
| 1976 | 5 | 1997 | 5 | 2020 | 8 |
| 1980 | 6 | 2001 | 8 | | |
| 1984 | 5 | 2006 | 8 | | |

### சிங்கப்பூரின் முதல் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக தமிழர்

சிங்கப்பூர் சுதந்திரம் அடைந்து 16 ஆண்டுகள் கழிந்த பிறகுதான் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி ஓர் இடத்தை வென்றது. அவ் ஆசனத்தைப் பெற்றவர் ஒரு தமிழர் ஆவர். பாட்டாளிக் கட்சி 1957 இல் சிங்கப்பூரின் முன்னாள் முதல்வர் டேவிட் மார்சல் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. 1981 இல் இக்கட்சியின் அப்போதைய தலைவர் ஜே. பி. ஜெயரத்தினம் நாடாளுமன்றத்தின் முதலாவது எதிர்க்கட்சி உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

அப்போது அவர் ஆன்சன் தொகுதியில் இடம்பெற்ற இடைத்தேர்தலில் போட்டியிட்டு ஆளும் மக்கள் செயல் கட்சியின் உறுப்பினரைத் தோற்கடித்து நாடாளுமன்றம் சென்றார். 1984 பொதுத் தேர்தலில் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். 1986 இல் இவர் உறுப்பினர் பதவியை இழந்தார். ஜெயரத்தினம் பின்னர் 1988 முதல் 2001 வரை நாடாளுமன்றத்தின் தொகுதியில்லா நாடாளுமன்ற நியமன உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சிங்கப்பூரின் யாப்பின் படி, சிங்கப்பூர் நாடாளுமன்றத்தின் அதிகபட்சக் கால எல்லை 5 ஆண்டுகள் ஆகும். இக்காலப்பகுதிக்குள் குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தைக் கலைத்து, மூன்று மாதத்திற்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். பிரதமர் அலுவலகத்தின் கீழுள்ள தேர்தல் திணைக்களத்தால் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. சிங்கப்பூரில் வாக்களிப்பது கட்டாயம் ஆகும். வாக்களிக்கத் தகுதி பெறும் வயதெல்லை 21 ஆகும். சிங்கப்பூர் வெஸ்ட் மின்ஸ்டர் மக்களாட்சி முறைமையில் ஓரவை நாடாளுமன்றக் குடியரசு ஆட்சியைக் கொண்டுள்ளது. 1959ஆம் ஆண்டு முதல் மக்கள் செயல் கட்சி அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி பெற்று ஆட்சி நடத்தி வருகிறது.

ஆசியான் அமைப்பை நிறுவிய நாடுகளில் ஒன்றான சிங்கப்பூரில் ஏப்பெக் அமைப்பின் செயலகம் அமைந்துள்ளது. அத்துடன், கூட்டுசேரா இயக்கம், பொதுநலவாய நாடுகள் ஆகிய அமைப்புகளிலும் உறுப்பு நாடாக உள்ளது. மிகவும் சிறிய பரப்பளவு கொண்ட சிங்கப்பூர், தென்கிழக்காசியாவில் மிகச் சிறிய நாடாகும். இருப்பினும் விடுதலைக்குப் பின், அந்த நாட்டில் பல்வேறு பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டன. சிங்கப்பூர் அரசு தன் உள்கட்டுமானத்தைத் தரப்படுத்திக் கொண்டதால், சிங்கப்பூர் மக்களின் வாழ்க்கைத் தரம் பன்மடங்கு உயர்ந்துள்ளது.

ஒரு காலத்தில் காற்று மட்டுமே குடியிருந்த சிங்கப்பூரில், இன்று கால் வைக்க முடியாத அளவுக்கு ஜனத்திரள் பிதுங்கி வழிகிறது. அப்போது, இங்கு படிக்க வருவோருக்கும் பணி நிமித்தமாக வருவோருக்கும் சில மைல் தூரத்திலேயே 'குடியுரிமை' காத்திருந்தது. இன்றோ, சிங்கப்பூரில் சாதாரண ஒரு வேலை கிடைப்பது கூட எட்டாக்கனியாகியுள்ளது. 'எதுவும் இல்லை' எனும் நிலையில் இருந்து 'என்ன வேண்டும்?' எனும் நிலைக்கு சிங்கப்பூர் உருமாறியுள்ளது. பல நாடுகளும் மூக்கின் மேல் விரல் வைக்கும் அளவுக்கு சிங்கப்பூர் வளர்ந்து நிற்கிறது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால் புரைக்கேறி...

குறித்த குழந்தையின் தாய் நேற்றுக் காலை குழந்தைக்கு பாலூட்டியுள்ளார்.

இதன் பின் குழந்தை அசைவற்று காணப்பட்டதையடுத்து உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

எனினும் குழந்தை ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணகுமார் ஹரிகரன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தையின் சடலம் மீதான பிரேத பரிசோதனையினை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (7-104)

## ரயிலுடன்...

சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் மீசாலை வடக்கைச் சேர்ந்த 67 வயதான கி.நாகேஸ்வரி என்ற வயோதிபப் பெண்ணே உயிரிழந்துள்ளார்.

மேற்படி மூதாட்டி தற்கொலை செய்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (7-30)

## திலீபனின்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளை நினைவேந்தும் இப்படியான நிகழ்வுகளை தமிழ் அரசியல்வாதிகள் உடனடியாக நிறுத்த வேண்டும்.

வடக்கில் திலீபனை நினைவேந்தும் நிகழ்வுகளுக்குத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி மாவட்ட நீதிமன்றங்களில் பொலிஸார் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

எனினும் வடக்கில் உள்ள மாவட்ட நீதிமன்றங்கள் அந்த மனுக்களைத் தள்ளுபடி செய்து திலீபன் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கியுள்ளன.

வடக்கு நீதிமன்றங்கள் இப்படியான கட்டளைகளைத்தான் வழங்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

எனினும் பொலிஸார் தமது கடமைகளை உரிய வகையில் செய்து வருகின்றனர். வடக்கிலும் கிழக்கிலும் பொலிஸாருக்குச் சவால் விடும் வகையில் தமிழ் அரசியல்வாதிகள் செயற்பட்டு வருகின்றனர். அவர்களைத் திருத்தவே முடியாது.

திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் நாட்டில் மீண்டும் இன மோதலுக்கு வழிவகுத்து இரத்தக்களரியை ஏற்படுத்தும் என்பதைத் தமிழ் அரசியல்வாதிகளிடம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளை நினைவேந்தும் இப்படியான நிகழ்வுகளை தமிழ் அரசியல்வாதிகள் உடனடியாக நிறுத்த வேண்டும்.

எனவே இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவும் பாராளுமன்ற தெரிவுக்குழுவும் சுயாதீன விசாரணைகளை நடத்தி அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும். தேவையேற்படின் சர்வதேச விசாரணையை நாடமுடியும் என்றும் தெரிவித்துள்ளார். (7)

## 36ஆவது...

திலீபன் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது.

அதன் பிரகாரம் நாளை காலை 7.30 மணிக்கு ஊரெழுவிலிருந்து கிட்டு பூங்கா நோக்கி ஊர்திப் பேரணி ஆரம்பமாகி தொடர்ந்து காலை 8.00 மணிக்கு கிட்டு பூங்காவிலிருந்து நல்லூர் நினைவுத்தூபி நோக்கி நடைபவனி ஆரம்பமாகும்.

அதேவேளை தியாக தீபம் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த நேரமான 10.48க்கு அவர் உண்ணாவிரதமிருந்த நல்லூரின் வீதியிலும் நினைவுத்தூபியிலும் சமநேரத்தில் மாவீரர்களின் பெற்றோரால் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து மலர் வணக்கம் நடைபெறும் எனவும் அதன் பிரகாரம் இந்த நினைவேந்தலில் கட்சி பேதமின்றி அனைவரும் பங்குகொண்டு தியாக தீபத்தினை நினைவேந்திடுமாறும் நினைவேந்தல் நிகழ்வுகளுக்காக நாளை காலை 7 மணி தொடக்கம் மதியம்12 மணிவரை பருத்தித்துறை வீதி மூடப்படும். பயணம் செய்பவர்கள் மாற்றுவழிகளை பயன்படுத்தவும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (7-33)

## கிணற்றில்...

51 வயதுடைய ஆணொருவர் நேற்று கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் ஏழாலைப் பகுதியில் வசித்து வந்த ஆறுமுகம் துரைராசா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபர் நேற்று முன்தினம் வீட்டில் இருந்து புறப்பட்டு நீண்ட நேரமாகியும் வீட்டிற்கு திரும்பவில்லை.

இந்நிலையில் அவரை தேடிச் சென்றபோது, நேற்றுக் காலை தோட்டக் கிணற்றினுள் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. அவர் மதுபோதையில் தவறி கிணற்றினுள் விழுந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (7-104)

## தியாக தீபம்...

விளையாட்டு மைதானத்தில் உணர்வுபூர்வமாக இந்த நிகழ்வு நடைபெற்றது.

முன்னைநாள் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ஆறுமுகம் ஜோன்சன் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் பொதுச்சுடரை மூன்று மாவீரர்களின் தாயார் ஜோசேப் முணியம்மா ஏற்றிவைக்க மலர் வணக்கத்தை முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆரம்பித்து வைக்க தொடர்ந்து மாவீரர்களின் சகோதரர்கள் தாயக அரசியல் துறை செயற்பாட்டாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள், மாணவர்கள், இறுதிப் போட்டிக்கு தெரிவான அணி வீரர்கள் என பலரும் மலர் வணக்கம் செலுத்தினர்.

தொடர்ந்து தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவுகளைச் சுமந்த மாபெரும் மென்பந்து துடுப்பாட்டப் போட்டித் தொடரின் இறுதிப்போட்டிக்கான அணிகளை சந்தித்து மைதானத்தில் நாணயச்சுழற்சி நடைபெற்று போட்டிகள் ஆரம்பமாகி நடைபெற்றது. (7-104)

## ஹெகலியவிட...

பெறும் முக்கிய அமைச்சரவைக் கூட்டத்திற்கு தலைமை தாங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது சுகாதார அமைச்சராக கெஹலிய ரம்புக்வெல கடமையாற்றி வருகின்றார். அண்மையில் பாராளுமன்றத்தில் அவருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டாலும் மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு, தரம் குறைந்த மருந்துப்பொருள் இறக்குமதி, தரம் குறைந்த மருந்துப் பயன்பாட்டால் நோயாளிகள் பாதிப்பு எனப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அமைச்சர் மீது தொடர்ந்தும் சுமத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான பின்னணியில் சுகாதார அமைச்சுப் பதவியை டாக்டர் ரமேஷ் பத்திரணவுக்கு வழங்க ஜனாதிபதி ஆலோசித்துள்ளார்.

முன்னதாக நான்கு புதிய அமைச்சர்களை நியமிக்கவும் அமைச்சுப் பதவிகளில் மாற்றம் செய்யவும் ஜனாதிபதி முடிவெடுத்திருந்த நிலையில் இன்றைய அமைச்சரவை கூட்டம் தீர்க்கமிக்கதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (7)

*(இது தொடர்பில் முன்னர் வந்த செய்தி உள்ளே)*


மெகா பவர்
திகதி 24/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1595
S 10 28 47 62 66
43984

தன நிதானய
திகதி - 2023.09.24
சீட்டிழுப்பு இலக்கம் - 1277
A 16 35 45 68 A
41452

Lucky 7
திகதி 24.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0073
L7 இலக்கம் 2 3
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 2 6 2 1 9 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3489
சீட்டிழுப்பு திகதி 24.09.2023
V 21 24 31 41
V 21920
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.24
சீட்டிழுப்பு இலக்கம் 556
சிம்மம் 02 27 30 52 சிம்மம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/09/24
சீட்டிழுப்பு இலக்கம் 5247
H 8 6 8 2 2 0
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2221
வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.24
தினம் ஞாயிற்றுக்கிழமை
09 25 30 36 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,603,220.40
24527 335

சனிதா
திகதி 2023.09.24 வெற்றி வாரம் 4382
06 36 49 54 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,508,388.00
59997 962

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 380
சீட்டிழுப்பு திகதி 2023.09.24
கபிலம்
வெற்றி இலக்கங்கள் 26 35 45
08
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,882,600/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3933
வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.09.24
தினம் ஞாயிற்றுக்கிழமை
14 31 36 45
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,567,872/-
35055 766

திகதி 24.09.2023 வெற்றி வாரம் 1397 வர்ணம் மஞ்சள்
K 02 03 07 33 43
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 443,889,564.20
71180 921
DLB
தொலை பேசி 011-2 333 546-47
Web : www.dlb.lk

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2047
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,858,104/-
சீட்டிழுப்பு திகதி : 2023.09.24
ADA KOTIPATHI
17 40 61 75 Q
52035 979


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலிவு விற்பனை

SILVER SHIELD

தகந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7317)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**



## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

**பஸ் சேவை**

AIRPORT PICK UP DROP SERVICE



யாழ் - கொழும்பு 2,900/=
வடமராட்சி - கொழும்பு 2,700/=
(17019)

**T.P: 077 544 8503**



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378**
**076 097 3127**



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17175)

**076 825 7716** (ஆகாஸ்)



## விற்பனையாளர் தேவை

விக்ரோரியா கல்லூரிக்கு முன்பாக உள்ள கட்டட தொகுதியில் உள்ள Terrazzo Marble கடை ஒன்றிற்கு பெண் விற்பனையாளர் தேவை. கணனி அறிவு உள்ளவர் விரும்பத்தக்கது. (17209)

**077 222 1220**
**076 289 7205**



## அலுவலக வேலை - பயிற்சி

2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு



- நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
- இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
- பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

(C-7320)

சம்பளம் - 60,000/- (2 மாதம்)

**V2 TRAVELS - 0777-068-777**



## CANADA VISITOR VISA



VISITOR VISA வில் **கனடா** செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

**CIMS COLLEGE** (C-7320)
**0777-068-777**
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்

V2 TRAVELS



## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 42 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- தரகர் தேவையில்லை
- நன்னீர் ஊற்று.

தொடர்பு
**077 623 4204**
**076 755 8606**
**077 076 0389**

(17226)



## CANADA VISA

1)Minor Education - (Age Limit - 7 to 17 years) தாய், தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.
2)Visitor Visa - கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
3)Student Visa-IELTS 6.00 உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.(jan 2024)
4)Work and Study Program - Course fee after Visa மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

Contact : VISA Consultant,
136, Adiyapatham Road,
Thirunelvely, Jaffna. T.P : 077 038 5584
(17179)



## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கி வரும் பிரபல்யமான தனியார் கல்வி நிறுவனத்தின் சிற்றுண்டிச் சாலையில் வேலை செய்வதற்கு பெண் ஊழியர் தேவை.சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். (C-7318)

**077 233 8098**


# மரண அறிவித்தல்

## திருமதி அன்னபாக்கியம் நல்லையா

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 11.04.1944 | 20.09.2023 |



யாழ்.அச்சுவேலி பத்தமேனி காளி கோவிலடியைப் பிறப்பிட மாகவும் கனடா Scarborough ஐ வதிவிடமாகவும் கொண்ட அன்னபாக்கியம் நல்லையா அவர்கள் கடந்த 20.09.2023 புதன்கிழமை அன்று கனடா வில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா - கதிராசி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும் சாந்தகுமாரியின் (சாந்தா) அன்புத் தாயாரும் ஸ்ரீரங்கநாதன் (ஸ்ரீ NSR Logistics) அவர்களின் அன்பு மாமியாரும் சஹானா, பிரவீந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா, மகேந்திரம், தவேந்திரம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், சிவசம்பு, சுந்தரம்பிள்ளை, நாகேந்திரம், சோதிப்பிள்ளை, பொன்னம்பலம், வள்ளியம்மை மற்றும் சரஸ்வதி (இலங்கை), கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கனேடிய நேரப்படி பி.ப 5.00 - 9.00 வரை இன்று திங்கட்கிழமை Ajax Crematorium & Visitation Centre 384, Finley Ave, Ajax, ON LIS 2E3, Canada இல் பார்வைக்கு வைக்கப் பட்டு நாளை செவ்வாய்க்கிழமை 8.00 - 10.00 மணிவரை Ajax Crematorium & Visitation Centre 384, Finley Ave, Ajax, ON LIS 2E3, Canada இல் இறுதிக்கிரியை இடம்பெற்று தகனம் செய்யப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்

(17225)


வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்

Sky Yoga



## முழுமை நல வாழ்விற்கான மனவளக்கலை யோகா Sky Yoga

**நான்கு நாள் சிறப்பு பயிற்சி நெறி**

Sep - 28 முதல் ஒக்டோபர் 1 ஆம் திகதி வரை
நேரம் : காலை 9 - 12 மணிவரை

தொடர் விடுமுறை நாட்களை முன்னிட்டு இலங்கை மனவளக்கலை மன்றத்தின் ஏற்பாட்டில்



- இலங்கை பேராசிரியர்களால் நடாத்தப்படும் ஆரம்ப நிலை Sky Yoga பயிற்சிகள்
- நோயின்றி வாழ + எளியமுறை உடற்பயிற்சி
- மனநலம் பெருக - தவமும் தற்சோதனையும்
- உயிர் வளம்பெருக்க - காயகல்பப் பயிற்சிகள்

(17223)

இடம்:
யாழ் தவமையம்
வேதாத்திரி ஆன்மீக கல்வி நிலையம்
14/4, கோயில் வீதி, 1 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு :
076 395 9293
077 088 2939
077 419 7138


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல. 191, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org